
# விபவி

ஒக்டோபர் செய்திமடல்



விபவி கலாசார மையம், 81/4, பாகொடை வீதி, நுகேகொட.

# நிகழ்ச்சி நிரல்

**1. நவம்பர், 19, 2000 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணி**

**திரைப்படக் காட்சியும் ஆய்வரங்கும்**

## பாரதி

**பெ.க.ஆ.நி. 58, தர்மராம வீதி, கொழும்பு - 06.**

**2. ஆய்வரங்கம்**

**தலைமை: திரு. டாக்டர் M.K. முருகானந்தன்**

**ஆய்வு செய்வோர்:**

1. திரு. கே. விக்னேஸ்வரன்
2. திரு. எஸ். சிவகுமார்.
3. திரு. சோ. தேவராஜா

**3. கலந்துரையாடல்**

# அபசகுனம்

**- கவிஞர் ஏ. இக்பால்**

'பக்கப்பூச்சி' அலறும் குரல்
உம்மா நடுச்சாமம் எழுந்திருந்து
உக்கிரமாய் முகம் மாறி
அபசகுனம் எங்கோ மையத்து!
இக்கணமோ! எக்கணமோ!
என்று நடுங்குவாள்!

அமைதியான நடு இரவில்
ஆந்தை அலறும்
உம்மா எழுந்து அபசகுனம்
எங்கோ மையத்து விழும் என்பாள்
இமை சுழலும் அன்று நாம்
அச்சத்துள் ஆழ்வோம்!

ஆந்தை இந்நாட்டை விட்டு
அகன்று விட்ட காலமதிகம்
ஈந்து விட்டு அபசகுனம்
கூறி அது எங்கோ ஒளிந்ததுவோ!
ஒவ்வொரு நாளும் இங்கே
ஒரு நூறு மையத்து!

முன்னேற்றம் உழைப்பெல்லாம்
முடங்கி யழிந்ததற்கும்
பொன்னான நாடின்று
பொலிவிழந்து போனதற்கும்
எந்நாளும் சாவு இருக்கிறது
இதுதான் இன்றைச் செல்வ வளர்ச்சி!

செல்வம் சுருட்டுதலிலும்
சேர்ந்து கழுத்தறுப்பதிலும்
உள்ளம் மரத்துப் போவதிலும்
இங்கு மனிதர் பழகிவிட்டார்
நல்ல மனம் நிறைந்து
நாட்டில் உலவாதா!

சாதி சனம் மொழிகள்
சார்ந் ததிகம் இங்கிருத்தல்
நீதியுயர்த்தும் பெருமை
நீளுலகில் தந்து விடும்
ஈது தெரியாமல் நாம்
ஏனழிந்து இடருகிறோம்!

# கலாசார அலுவல்கள் அமைச்சருக்கு ஒரு கடிதம்

**கலாசார அலுவல்கள் அமைச்சர்**
**திரு. மொன்றி கொபல்லாவ**
**கலாசார அமைச்சு,**
**பத்தரமுல்லை.**

கௌரவ அமைச்சர் அவர்களே!

கலாசார அமைச்சராகப் பதவியேற்ற தங்களுக்கு எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் அதேவேளை தங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பாரிய பொறுப்புக்களை சிறப்பாகச் செய்வதற்குத் தேவையான சக்தி கிட்ட வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

1991 முதல் கடந்த 10 ஆண்டுகளாக கலாசாரத் துறையில் தேசிய மட்டத்தில் செயற்பட்ட முதன்மை தொண்டர் நிறுவனம் என்ற வகையில், கடந்த 10 ஆண்டுகளில் நாம் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில், கலாசாரத் துறைக்கு அரசு ஆற்ற வேண்டியவை என நாம் காணும் விடயங்களை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம். பொது ஜன ஐக்கிய முன்னணி அரசின் கடந்த 6 ஆண்டுகால ஆட்சியின் போது அமுல்படுத்தப்படாத காலம்தாழ்த்தப்பட்ட பொறுப்புக்கள் உங்கள் தலைமையின் கீழ் அமுல் படுத்தப்படும் என்று நம்புகின்றோம்.

கலாசாரத் துறையைப் பொறுத்த மட்டில் ஆட்சி அதிகாரத்திலிருந்த எந்த ஒரு அரசும் முன்வைக்காத மிகச் சிறந்த முற்போக்கான யோசனைகளையும் கொள்கைகளை யும் 1994ல் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் காணக்கூடியதாக இருந்தது.

நாட்டின் அபிவிருத்திப் பணிகளின் முக்கிய அங்கமாக மக்களின் கலாசார வாழ்வை மேம்படுத்துவது அத்தியாவசியம் என மேற்படி தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அதே சமயம் கலாசாரத் துறைமீது செலுத்தப்பட்டு வந்த அரசியல் செல்வாக்கு அகற்றப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டிருந்தது. அதே சமயம் அங்கு உள்ளடக்கப்பட்டிருந்த தேசிய கலாசாரப் பேரவை, இலக்கிய - நாடக - நுண் கலைத் துறைகளின் அபிவிருத்திக்கான 'அக்கடமி' களை அமைப்பதற்கான உறுதி மொழிகளும் மிக முக்கியத்துவம் வாய்ந்தது எனவும் அத்தியாவசிய நடவடிக்கை என வும் நாம் கருதினோம். மேற்படி கொள்கைகள், உறுதிமொழிகள் மீது வைத்த நம்பிக்கை கள் காரணமாகவே எமது நாட்டின் தலை சிறந்த கலைஞர்களில் பெரும்பான்மையினர் 1994 ல் பொது ஜனஜக்கிய முன்னணிக்கு ஆதரவளித்தனர். மேற்படி உறுதிமொழிகளுக்கு ஏற்ப உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு உதவும் தலை சிறந்த கலைஞர்களும் அறிவுஜீவிகளும் தயாராக விருந்தனர். அவர்களின் அபிலாசைகளை பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப்பு என்ற வகையில் நாம் இதனை நன்கு அறிவோம்.

1994 முதல் 2000 வரை செயற்பட்ட கலாசார அமைச்சு கலைஞர்களின் மேற்படி நம்பிக்கைகளையும் அபிலாசைகளையும் தகர்த்தெறிந்து விட்டது என்பதை மிகக் கவலையுடன் குறிப்பிடுகின்றோம். 2000 ல் பொதுத் தொர்தல் வந்தபோது மேற்படி கலைஞர்களில் பெரும்பான்மையினர் அதிக அக்கறையும் ஈடுபாடும் காட்டாமலே இருந்துவிட்டனர். இதனை தங்களுக்குப் புதிதாகச் சுட்டிக் காட்டத் தேவையில்லை. கடந்த ஆறு ஆண்டு காலத்தில் கலாசார அமைச்சிற்கும் தலைசிறந்த கலைஞர்களுக்கு மிடையில் பல மோதல்கள் ஏற்பட்டன. அமைச்சிற்கு எதிராக முன்வைக்கப்பட்ட விமர்சனங் களும் பாரதூரமானவை. பல சந்தர்ப்பங்களில் கலைஞர்களின் விமர்சனங்களினூடாக இவ்வமைச்சின் நடவடிக்கைகளையிட்டு ஜனாதிபதி தலையிட நேர்ந்தமையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். 1994 ல் கலாசார அமைச்சின் பொறுப்புக்களை ஏற்ற திரு. லக்'மன் ஜயக்கொடி பண்பான நெகிழ்ச்சியான ஓர் அமைச்சராக இருந்த அதே

நேரத்தில் பௌத்த சமய விவகார பொறுப்புக்களையே அவர் ஏற்றிருந்தார். இலக்கியம் உட்பட ஏனைய கலைத்துறைகளுக்கப் பொறுப்பாக பிரதி அமைச்சரே செயற்பட்டார். இப்பிரதி அமைச்சர் கலைஞர்களின் விமர்சனங்களுக்குக் காட்டிய பிரதிபலிப்புகள் மிக வேதனைக்குரியன. கலாசாரத் துறைக்குரிய அரசு நிறுவனங்கள் சபைகள் என்பன இப்பிரதி அமைச்சருக்கு விசுவாசமான ஒரு சிறு கும்பலின் பிடியிலேயே சிக்கி இருந்து வந்தன. எனவே பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொள்கைப் பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமைய கலாசார அமைச்சின் நடவடிக்கைகள் அமுல் படுத்தப்படாமல் இக்கும்பலின் விருப்பு வெறுப்புக்கமைவான நிகழ்ச்சி நிரலே நடைமுறைப்படுத்தப்பட்டன.

தேசிய கலாசாரப் பேரவை, இலக்கியம், நாடகம், நுண்கலைகள் போன்ற துறைகளுக்கான 'அக்கடமி' களை அமைப்பது தொடர்பான பிரதி கலாசார அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கத் தயாரான சட்ட வரைவு 1994 ல் பொது ஜன ஐக்கிய முன்னணி முன்வைத்த கொள்கைப் பிரகடனத்திற்கு முற்றிலும் முரணானது. மேற்படி சட்ட வரைவை இந்நாட்டின் சகல தேர்ச்சி பெற்ற கலைஞர்களும் அறிஞர்களும் எதிர்த்தமையால் இறுதியில் இது வாபஸ் பெறப்பட்டது.

மேற்படி சட்ட வரைவை எதிர்த்த கலைஞர்களும் அறிஞர்களும் அதனை திருத்தும் போது தமது ஆலோசனைகளுக்கும் கருத்துக்களுக்கும் இடமளிக்குமாறு கோரினர். ஆனால், பிரதி அமைச்சரின் அதிகாரத்துவ நிலைப்பாடு காரணமாக மேற்படி அக்கடமிகள் கட்டியெழுப்பப் படுவது கைவிடப்பட்டது.

கலாசாரத்துறை தொடர்பாக ஜனாதிபதி முன்வைத்த மிகப் பெறுமதி வாய்ந்த யோசனையான பிரதேச கலாசார மத்திய நிலையங்களை அமைக்கும் செயற்திட்டம் பற்றி இத் துறையைச் சார்ந்த அறிஞர்களினதும் கலைஞர்களினதும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளாமல் சில அதிகாரிகள் சீரழிந்த அதிகாரத்துவக் கட்டமைப்பின் கீழ் கலாசார மத்திய நிலையங்களை உருவாக்கியமையால் மேற்படி முதலீடுகள் மக்களுக்கு உரிய பயனை அளிக்க வில்லை.

அரசியல்வாதிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் முன்னுரிமையளித்து நடத்தப்படுகின்ற சாகித்திய விழாக்கள், நாடக விழாக்கள் மூலம் கலைஞர்கள் தூர விலகி அன்னியமயமாகி மேற்படி விழாக்களில் பங்கு கொள்ளாமலேயிருக்கின்றனர். சான்றிதழ்களையும் விருதுகளையும் பெறும் ஒரு சில கலைஞர்களுக்கு மேலதிகமான அறிஞர்கள் கலைஞர்கள் 5 அல்லது 10 பேர் மாத்திரமே மேற்படி விழாக்களில் பங்கு பற்றி வருகின்றனர்.

தொடர்ச்சியாகக் கடந்தகால அனுபவங்களை எழுதுவதற்குப் பதிலாக புதிய அமைச்சுப் பொறுப்பை ஏற்றிருக்கும் தங்களுக்கு பின்வரும் யோசனைகளை முன் வைக்க விரும்புகின்றோம்.

1. குடிமக்களின் கலாசார வாழ்வின் முன்னேற்றம் நாட்டின் அபிவிருத்தி பற்றிய முக்கிய அளவுகோலாகும். ஆகவே, கலாசார அமைச்சின் சார்பில் அரசு ஒதுக்கும் நிதி அதிகரிக்கப்பட வேண்டும்.
2. எதிர்கால சந்ததியினரின் ஆன்மீகக் கட்டுக்கோப்பையும் ரசனைகளையும் வளர்ப்பதற்கு கல்வித்துறை - ஊடகத் துறை என்பவற்றோடு நேரடித்தொடர்பை கலாசார அமைச்சு கட்டியெழுப்ப வேண்டும். இதன் பொருட்டு கல்வி அமைச்சுடனும் ஊடக அமைச்சுடனும் ஒருங்கிணைந்து செயற் திட்டங்களை அமுல்படுத்த வேண்டும்.
3. தேசிய இளைஞர் சேவை மன்றம் அமுல் படுத்தும் கலாசார நடவடிக்கைகளைத் திட்டமிடும்போதும் கலாசார அமைச்சின் மேற்பார்வை அத்தியாவசியமாகும்.
4. தேசிய கலாசாரப் பேரவை, சாகித்திய அக்கெடமி, நாடக நுண்கலை அக்கடெமி போன்ற நிறுவனங்களை சுயா

தீன நிறுவனங்களாகக் கட்டியெழுப்பத் தேவைப்படும் சட்ட வரைபுகளைத் துரிதமாகத் தயாரிக்க வேண்டும். இதற் கான யோசனைகளை அனுபவமுள்ள தேர்ச்சி பெற்ற கலைஞர்களிடமும் அறிஞர்களிடமும் ஜனநாயகக் கட்டமைப்பின் ஊடாகப் பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

5. தற்போது தனித்தனியாகச் செயற்படும் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், டவர் ஹோல் மன்றம், என்பவை தேசிய கலாசார சபையின் கீழ் செயற்படும் நிறுவனங்களாக மாற்றியமைத்து கலாசார அமைச்சின் கீழ் கொண்டு வரப் படவேண்டும்.

6. கலாசாரத் துறையின் தேசிய விழாக்களின் போது கலைஞர்களுக்கு முக்கிய த்துவம் வழங்கக் கூடியவாறு அவை ஏற்பாடு செய்யும் வகையில் அவசியமான ஆலோசனைகள், நெறிப்படுத்தல் வழங்கப்பட வேண்டும்.

7. தற்போது இயங்கிவரும் கலாசார நிறு வனங்களுக்கான உத்தியோகத்தர்களை நியமிக்கும் போது ஜனநாயகரீதியானதும் ஒளிவு மறைவில்லாததுமான முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். அரசியல் நியமனங்களைச் செய்யக் கூடாது.

நீங்கள் நலமே வாழவும், கடினமான பொறுப்புக்களை ஏற்கவும் அவசியமான தைரியம் கிட்ட வேண்டும் என மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்

நாட்டின் கலாசார மேம்பாட்டிற்காகத்தன்னை அர்ப்பணித்துள்ள விபவி கலாசார மையத்தின் நெறிப்படுத்தும் குழு

**ஒப்பம்: கலாநிதி சுனில் விஜேசிரிவர்தன**
**தேசியக் கூட்டிணைப்பாளர்.**

# புரட்சியின் குழந்தைகள்

1992 ஆகஸ்ட் மாதத்தோடு ஆங்கிலக் கவிஞர் ஷெல்லி பிறந்து இருநூறு ஆண்டுகள் பூர்த்தியடைந்து விட்டன. ஷெல்லியைப் 'புரட்சியின் குழந்தை' என்று கூறுவார்கள். 'உங்கள் வாழ்க்கையின் சக்திவாய்ந்த பேரொலி புயலாகக் கிளர்ந்து கொடுங்கோலர்களின் ராஜ சிம்மாசனங்களைத் தகர்த்துத் தூளாக்கட்டும்.' என்று கூறியவன் ஷெல்லி. இதையேதான் பாரதி 'நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி நயம் புரிவாள். எங்கள் தாய். அல்லாராயின் அவரை விழுங்கி ஆனந்தக் கூத்தாடுவாள்' என்று பாடுகின்றான். பாரதியையும் ஷெல்லியையும் ஒப்பிட்டு தொ. மு. சி ரகுநாதன் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னே ஒரு நூல் எழுதியுள்ளார். தமிழ்மக்களிடம் பரவலாகச் சென்று போற்றப்பட்ட நூலது. ஒப்பிலக்கிய வகைகளில் அது ஒரு முன்னோடியென்று சொல்லலாம். பல நாள் கழித்து மீண்டும் அந்த நூலைப் படிக்கும் போது ஷெல்லியைப் பற்றியும் பாரதியைப் பற்றியும் பல பரிமாணங்கள் நமக்கு கிடைக்கின்றன. இப்போது பாரதியையும் கேரளக் கவிஞர் வள்ளத் தோலையும் ஒப்பிட்டு, கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் ஆங்கிலத்தில் ஒரு நூல் கொண்டு வந்திருக்கின்றார். தேசப் போராட்டம் உச்சக்கட்டத்தில் இருந்த காலத்தில் வாழ்ந்த இரு பெரும் கவிஞர்களை ஒப்பியல் செய்கிறது. அவர் கவிதைகளுக்கான ஊற்றுக்கண், பாடுபொருள், மாறுபட்ட புதியநடை இவைகளை விளக்கி சொல்கிறது. பாரதி மாதிரி இல்லாமல் நீண்ட நாள் வாழ்ந்தவர் வள்ளத்தோல். வள்ளத்தோலின் மரபு சார்ந்த மனிதாபிமானமும் பாரதியின் புரட்சிகர மனிதாபிமானமும் இந்த நூலில் தெளிவாக விபரிக்கப்படுகின்றன.

# கலாசாரம் மற்றும் கலைகள் பற்றிய கொள்கைகளையும் நிறுவனங்களையும் உருவாக்குவதில் கவனிக்க வேண்டிய விடயங்கள்

இன்று உருவாகும் எத்தகைய கொள்கையாயினும் கட்டமைப்பாயினும் பின்வரும் விடயங்களையும் அடிப்படைகளையும் கவனத்திற் கொள்ள வேண்டும் என நம்புகின்றோம்.

முழுமையான அபிவிருத்திக்கு அத்தியாவசியமான ஓர் அங்கம் என்ற வகையில் கலாசாரத்தின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து கலையின் சுயாதீனத்திற்கு மதிப்பளித்து அது தொடர்பில் செய்யப்படும் அரச தலையீட்டை குறைக்கும் அதே நேரத்தில், குறிப்பிட்டளவு அனுசரணையை அதற்கு வழங்குவதை உறுதி செய்யும் வகையில் தற்போதைய அரசாங்கம் தனது உத்தியோகபூர்வ உறுதிமொழி மற்றும் கொள்கைப்பிரகடனம் மூலம் முக்கிய சில அடிப்படைகளை அங்கீகரித்துள்ளது. இவ்வடிப்படைகள் இன்றைய இலங்கையின் சூழல் பொருத்தத்திற்கும் பிரச்சினைகளுக்கும் ஏற்ற வகையில் ஆராயும்போது பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொள்வது மிக முக்கியமாகும்.

1. இலங்கைச் சமூகம் பல இனங்களை, பல மொழிகளை பல கலாசாரங்களைக் கொண்ட ஒரு சமூகமாகும். எனவே, அனைத்து இனங்களின் கலாசாரங்களையும், கலைகளையும் அமுல்படுத்தக் கூடியவகையில் சமமான மதிப்பு கொள்கைத்திட்டமிடலில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். எந்தவொரு, பிரஜைக்குமுரிய 'கலாசாரத்திற்குரிய உரிமை', சமூகக் குழுமங்களின் 'கூட்டுக் கலாசார உரிமைகள்' என்பனவற்றைப் பாதுகாப்பதை உறுதி செய்வது அரசின் அடிப்படைப் பொறுப்பாகும்.
2. கலாசார மேம்பாட்டிற்காகச் செயற்படுவது மத்திய அரசுக்கு மாத்திரம் உரித்தான பொறுப்பு அல்ல. உத்தேச அரசியல் யாப்பிற்கான வரைபில் மத்திய அரசுக்கென குறித்தொதுக்கப்பட்ட 63 விடயங்களில் ``கலாசாரம்'' குறிப்பிடப்படவில்லை. உத்தேச அரசியல் யாப்பின் வரைபு மூலம் கலாசார செயற்பாடு (மக்கள் கண்காட்சி உட்பட) பற்றித் தலையிடுவதற்கு மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. (மாகாணசபை விடயப் பட்டியல் இலக்கம் 20) எனவே, தேசிய மட்டத்திலான நிறுவனங்களுக்கும் பிரதேச மட்டத்திலான நிறுவனங்களுக்கும் இடையே முறைசார் கூட்டிணைப்பு உறுதிப்படுத்தப்படுவது அவசியமாகும்.
3. அரசு, தான் கடப்பாடு கொண்ட சர்வதேசப் பொறுப்புக்களுக்கும் தனது உறுதி மொழிகளுக்கும் ஏற்ப பேச்சுச் சுதந்திரத்தைப் பாதுகாத்து உறுதிப்படுத்தக் கடப்பாடுடையது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு அனைவரும் பேச்சுச் சுதந்திரம் பற்றிய உரிமைகளை அனுபவிக்கின்றனர். பேச்சு மொழி மூலமோ, கையெழுத்து மூலமோ, அச்சு மூலமோ, கலை ஊடகம் மூலமோ அல்லது தான் தேர்ந்தெடுக்கும் வேறு ஊடகம் மூலமோ, தேச எல்லைகளைக் கருதாது தகவல்களையோ அல்லது வேறு எந்தக் கருத்துக்களையோ தேடுவதற்கும், பெறுவதற்கும், விநியோகிப்பதற்கும் உள்ள உரிமையே இங்கு கூறப்படுகின்றது. இவ்வடிப்படை பொருளாதார, சமூக, மற்றும் கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கையின் 15 வது வாசகத்தின் மூலம் இது மேலும் வலுவூட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் அனைவருக்கும் கலாசார வாழ்வில் பங்குபற்றுவதற்குரிய உரிமை ஏற்றுக் கொள்ளப்படுவதோடு இவ்வுடன்படிக்கையை ஏற்று அங்கீகரிக்கும் அனைத்து அரசுகளும் விஞ்ஞான ஆய்வுகளுக்கும் கலை சிருஷ்டிகளுக்கும் தேவை யான சுதந்திரத்திற்கும் மதிப்பளிக்க கட்டுப்பாடுடையவர்கள் எனப் பிரகடனப்படுத்துகின்றது.

# வரையறுக்கப்பட்ட அரச தலையீடு அவசியமான துறைகளைப் பற்றிய பொது விடயங்கள்

குறுகியகால நோக்கில் எமது நாட்டின் இன்றைய பிரச்சினைகளையும் சூழல் பொருத்தத்தையும் நோக்குகையில் கலாசாரம் கலை பற்றிய சாதகமான அரச தலையீடு அவசியம் எனத் தோன்றுகின்றது. இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டமைப்பு யாது என ஆராய்கையில், ஒரு கலாசாரப் பேரவை, அக்கடெமி முறைமை என்பவற்றின் தேவையை கவனமாகப் பரிசீலிக்க வேண்டியுள்ளது. நாம் சில நிபந்தனைகளுடனான ''தேசிய கலாசாரப் பேரவை" (அல்லது வேறு பெயரிலான) மாதிரியைக் கொண்ட ஒரு பேரவை இச் செயற்பாட்டிற்கு முக்கியமானது எனக் கருதினால், அதனைக் கட்டியெழுப்புகையில் பின்வரும் அடிப்படைகள் தீர்க்கமான பெறுமானங்களைக் கொண்டிருக்கும் என நம்புகின்றோம்.

1. பன்முகக் கலாசார சூழலில் கலாசாரப் பேரவையின் கொள்கைகள் மூலோபாயங்கள் நகர்ப்புறங்களிலும் பிரதேசங்களிலும் வாழும் சகல மொழிக் குழுமங்களினதும் கலாசார - கலைத்துறைச் செயற்பாட்டாளர்களதும் தேவைகளைப் பிரதிபலிக்க வேண்டும். கலைத்துறைகளில் ஈடுபடவும் அவற்றின் வெற்றியின் பயன்களை அனுபவிக்கவும் அனைத்து இலங்கையர்களுக்கும் வாய்ப்பு வழங்கக்கூடிய வகையில் அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பு இலங்கை அரசுக்கே உண்டு.

   எனவே, வெறுமனே மரபுகளைப் பாதுகாப்பது மாத்திரமன்றி கலாசார நடைமுறையின் புதியதும் பரிணாம ரீதியானதுமான சந்தர்ப்பங்களை உள்வாங்கிக் கொண்டு கலாசார செயற்பாடுகளைப் பராமரிப்பது பற்றி மிகப் பரந்த முற்போக்கான வரைவிலக்கணத்திற்கு ஏற்ற மார்க்கத்தை மேம்படுத்த வேண்டும்.

2. கலைகளைப் பயன்படுத்தும் சூழ்நிலை அடிப்படைகள் என்பனவற்றை முன்னேற்றுவதற்கு, கலாசாரப் பேரவை தனது உபாய மார்க்கம் அபிவிருத்தித்துறை ஊடாக படிப்படியாக அடியெடுத்து பல் வேறு மண்டப வசதிகள் தொழில் நுட்ப வசதிகள் உட்பட்ட ஏனைய அனைத்து கட்டமைப்பு அடிப்படைகளை உறுதிப் படுத்தி பல்வேறு கலைத்துறைகளின் ஊடாக சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே சமயம், மேற்படி பேரவை நிதி ஏற்பாட்டுத்துறைகளினூடாக செயற்பட்ட வண்ணம் கலைஞர்களுக்கும், கலை கலாசார அமைப்புக்களுக்கும், மக்களுக்கும், தேவையான முறைமைகளை உறுதிப்படுத்தும் வகையில் நிதி ஏற்பாடுகளையும் வேறு அனுசரணைகளையும் வழங்கி கலையின் உன்னதத் தன்மையையும் மேம் படுத்துவதற்கு உதவ வேண்டும்.

3. இன்றைய உலகமயமாக்கலின் சூழ்நிலையில் கலையின் அபிவிருத்தி பற்றிய மற்றுமோர் அரச பொறுப்பு இந்நிறுவனத்தின் மூலம் செயற்படுத்தப்பட வேண்டும். உலகத்தின் ஏனைய நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் கலைபற்றிய அறிவு, தொழில் நுட்பம், தேர்ச்சி என்பவற்றை தடைகளின்றி எமது நாட்டைச் சேரக்கூடிய வகையில் நடவடிக்கைகளும் ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். கலைஞர்களிடையே நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தக் கூடிய வகையில் சுதந்திரமான கலாசார பரிமாற்றத்திற்குத் தேவையான சூழலை உறுதிப்படுத்துவதற்கு நாட்டில் கருத்துச்சுதந்திரத்தையும்

ஒளிவின்மையையும், தகவல் நிலைய ங்களைக் கட்டியெழுப்புவதன் மூலம் அமுல்படுத்த வேண்டும்.

4. கலைத்துறைகளில் ஈடுபடுவதற்கு தனி நபருக்குள்ள சுதந்திரத்தை பேரவை உறுதிப்படுத்த வேண்டும்.

அதே சமயம் மேற்படி கடமைகளை உரியமுறையில் செய்வதற்கு அதன் நடவடிக்கைகளை ஒளிவின்மையுடன் அமுல்படுத்துவதற்கு பின்வரும் நடை முறைகள் செயற்படுத்தப்பட வேண்டும்.

அ) முழுமையான செயற்பாடு ஜனநாய கரீதியாக அமைதல் வேண்டும். அதனை நியாயப் படுத்துவதற்கு கொள்கைகள் உருவாக்கப்படும் போது முன்னுரிமைகளைத் தீர்மா னித்தல், அனுசரணையாளர்களைத் தீர்மானித்தல் என்பன கலைஞர்களி னதும் சுவைஞர்களினதும் மிகநெரு ங்கிய உடன்பாட்டுடனும் அங்கீகா ரத்துடனும் செயற்படுத்துவதற்கு நிறுவன செயற்பாடு திறந்ததாக அமைய வேண்டும். பாராளுமன்றத் தின் ஊடாக மக்களுக்குப் பொறுப் புக்கூற வேண்டும். ஊடகங்களுக்கு திறந்ததாக இருத்தல் வேண்டும்.

ஆ) தனது கௌரவத் தன்மையையும் பக்கச்சார்பற்ற தன்மையையும் உறுதிப்படுத்துமுகமாக, பேரவை அரசிலிருந்து சுயாதீனமானதாகவும் தன்னாட்சி கொண்டதாவும் செயற் படக் கூடியதாக இருத்தல் வேண் டும். இதன் மூலம் குறிப்பிட்ட கலை த்துறை செயற்பாடு அல்லது ஒரு நிறுவனம் பற்றிய தமது அனுச ரணை அல்லது தாக்கம் அரசியல் செயற்பாட்டிலிருந்து தீர்க்கமான முறையில் தூர விலக்கி வைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

## உலகில் தொடரும் நோய்காரணமான மனித அழிவுகள்

1. 2000 ஆம் ஆண்டில் தடுக்கக்கூடிய நோய்கள் காரணமாக உயிரிழக்க விருக்கும் மனிதர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 30 லட்சம் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மதிப்பிட்டுள்ளது.
2. கடந்த வருடம் பூமி நடுக்கங்கள், வெள்ளங்கள் போன்ற இயற்கை அழிவுகளினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 80000 பேரும் எயிட்ஸ், சயரோகம், மலேரியா, வயிற்றோட்டம் ஆகிய நோய்களினால் மேலும் அதிகமானோர் இறந்துள்ளனர்.
3. உலகில். மலேரியா நோயினால் வருடம் தோறும் 26 லட்சம் பேர் இறக்கின்றனர். இவர்களில் 75 சத வீதமானவர்கள் சிறுவர்கள்.
4. எச்.ஐ.வி வைரஸ் தொற்றுக் கிருமியால் பாதிக்கப்பட்ட இரண்டு கோடியே 30 லட்சம் பேர் ஆபிரிக்காவில் வாழ்கின்றனர்.
5. ஆபிரிக்காவில் எயிட்ஸ் நோயினால் ஒவ்வொரு மணித்தியாலமும் 300 பேர் இறக்கின்றார்கள்.
6. ஸம்பியா நாட்டில் ஒவ்வொரு வாரமும் 1200 பேர் எயிட்சினால் இறக்கின்றனர்.
7. உலகில் ஒவ்வொரு வருடமும் புதிது புதிதாக 40,000 பேர் சயரோகத்தினால் பீடிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், உலக அழிவுகள் பற்றி அன்மையில் லண்டனில் வெளியிட்டுள்ள அறிக்கையிலிருந்து

# பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் நடத்தப்பட்ட படுகொலைகளைக் கண்டிக்கின்றோம்.

பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு புனர்வாழ்வு அளிக்கப்பட்ட தமிழ் இளைஞர்களில் 29 பேர் படுகொலை செய்யப்பட்டதோடு மேலும் பலர் படுமோசமாகக் காயப்படுத்தப்பட்டுள்ளனர். இப்படுகொலைகள் மனித உரிமைகளை மிக மோசமான முறையில் மீறும் ஒரு மிலேச்சத்தனமான குற்றச்செயலாகும். புனர்வாழ்வளிக்கப்பட்ட இளைஞர்கள் அரசாங்கத்தின் பொறுப்பிலேயே இருந்து வந்தனர். எனவே அவர்களைப் பாதுகாக்கத் தவறியமை மிகவும் பயங்கரமான ஒரு சம்பவமாகும்.

மூவின மக்களும் பண்டாரவளையில் சமாதானமாக வாழ்ந்தனர். புனர்வாழ்வு முகாமில் வாழ்ந்த இளைஞர்களுக்கும் கிராம மக்களுக்குமிடையே மிகச் சிறந்த உறவே நிலவியது. அவர்கள் மத்தியில் கசப்புணர்வு இருக்கவில்லை. பேரினவாதச் சக்திகளும் ஆயுதப்படைகளின் ஒரு பிரிவினரும் பண்டாரவளை படுகொலைகளுக்கு நேரடிப்பொறுப்பு. படுகொலைகள் நடத்தப்படுவதற்கு முன்னர் சுவரொட்டிகளை ஒட்டி இனவாதத்தைத் தூண்டிவிட்டுள்ளனர்.

இது 1983ல் ஏற்பட்ட இத்தகைய சம்பவங்களை நினைவுபடுத்துவதோடு அதன் பின்விளைவாக ஏற்பட்ட கொடூரமான நிகழ்வுகளை எமக்கு நினைவூட்டுகிறது. அரசுமீது வைக்கப்பட்டிருந்த நம்பிக்கையை இழந்த காரணத்தினால் அரச விரோத ஆயுதபாணிகளின் எழுச்சியை தீவிரப்படுத்துவதற்கும், நூற்றுக்கணக்கில் தமிழ் மக்களின் உயிர்களையும் உடைமைகளையும் அழிப்பதற்கும் காலாக கறுப்பு ஜுலை அமைந்தது.

எவ்வாறாயினும் நீதிமன்றத்தின் பொறுப்பில் இருந்த தமிழ் இளைஞர்கள் சிறைச்சாலைகளிலும் களுத்துறை பூஸா போன்ற தடுப்பு முகாம்களிலும் இதற்கு முன்னரும் வன்முறைக்கும் மரணத்திற்கும் உள்ளாக்கப்பட்டமையை நாம் இங்கு கவலையுடன் ஞாபகப்படுத்துகின்றோம். இத்தகைய கொடூரமான நிகழ்ச்சிகளைத் தடுப்பதற்கும் சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் திருப்திகரமான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை. பண்டாரவளையில் நடந்த சம்பவங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வேறு வடிவங்களில் உருவெடுக்கலாம் என நாம் அஞ்சுகின்றோம். அதே சமயம் சில ஊடகங்கள் பொறுப்பற்ற வகையில் இப்படுகொலைச் சம்பவங்களை திரித்துக் கூறி அவற்றை நியாயப்படுத்தவும் முற்படுகின்றன. இந்நடவடிக்கைகளைப் போலவே தமிழ் சிவிலியன்களுக்கு எதிராக சிங்கள சிவிலியன்களைத் தூண்டி விடும் முயற்சிகளையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எமது சமுகத்தில், இத்தகைய வெறுக்கத்தக்க பயங்கரமான மனிதாபிமானமற்ற செயல்களை புறக்கணிக்குமாறு சமுகத்தின் சகல பகுதிகளுக்கும் வேண்டுகோள் விடுக்கின்றோம். இனரீதியான வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடவோ அவற்றிற்கு ஊக்கமளிக்கவோ ஒத்தாசை வழங்கவோ வேண்டாம் என சகல மக்களிடமும் வேண்டுகின்றோம்.

**சினிமா**

'எல்லா வித அதிகாரவர்க்க நிறுவனங்களின் நடைமுறைகளைப் போலவே திரைப்படத் தொழிலும் சில திருத்த முடியாத விதிகளால் ஆளப்படுகின்றது. இந்த விதிகள் இந்தத் துறையில் பெரிய மனிதர்களின் பொருளாதார நலன்களையும் மற்ற நலன்களையும் பாதுகாப்பதற் காக ஏற்பட்டதாகும்.'

மிருணாள் சென்
வங்காள புரட்சிகர திரைப்பட நெறியாளர்

# பத்திரிகையாளர் நிமலராஜன்

பத்திரிகையாளர் நிமலராஜனின் படு கொலையைக் கண்டிக்கின்றோம். துப்பாக்கி அரசியல்வாதிகளால் அவரது வாய் அடைக்கப்பட்டுவிட்டது. செய்தித் தணிக் கையின்மீது நிகழ்த்தப்பட்ட ஓர் உச்சக் கட்டப் பயங்கரவாத நடவடிக்கையாகவே இதனை நாம் கருதுகின்றோம்.

உலகம் பூராவும் வாழ்ந்த நூற்றுக்கண க்கான பத்திரிகையாளர்கள் இவ்வாறாகத் துப்பாக்கிகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். நிமலராஜனும் இந்த விதிக்கு இலக்காகியுள்ளார்.

ஆட்சியிலிருந்த அரசாங்கங்களை விமர்சித்தமைக்காக கடந்த காலத்தில் இல ங்கையின் பல பத்திரிகையாளர்கள் அச் சுறுத்தப்பட்டுள்ளனர், தாக்கப்பட்டுள்ளனர், அல்லது கொலை செய்யப்பட்டுள்ளனர்.

வடபுலத்தின் போர்க்கள நிலவரங் களை, சமகால நிகழ்வுகளை, ஜனநாயக மறுதலிப்புகளை, ஆயுதக் குழுக்களினதும் அரச படையினரினதும் அட்டகாசங்களை உள்நாட்டிலும் சர்வதேசரீதியாகவும் வெளிக்கொணர்ந்த பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலைச் சம்பவம் இந்நாட்டின் எதிர்கால ஊடகத்துறையினர் மீதான அச்சுறுத்தலை தெளிவாகக் கோடிட்டுக் காட்டி நிற்கிறது.

நிமலராஜனுக்கெதிராக நீட்டப்பட்ட கொலைகாரர்களின் துப்பாக்கி இன்னு மொரு பத்திரிகையாளனுக்கெதிராக நீட்டப் படுவதற்கு முன்னர் அனைத்து ஊடகவிய லாளர்கள் மத்தியிலான ஒருமைப்பாடே இன்றைய தேவையாகும்.

## குதிரைகள் வெளியே நிற்கின்றன
### (அமெரிக்க – கறுப்பின நாட்டார் கதை)

ஒரு கறுப்பு இனத்தவன் தரை மார்க்கமாக மோட்வத்திற்குச் சென்று கதவைத் தட்டினான். சென் பீற்றர் வெளியே வந்து 'யார் அது?' என்று வினவினார். 'அது நான்தான்' என்றான் கறுப்பன். 'நீ நடந்து வந்தாயா அல்லது வாகனத்தில் வந்தாயா?' என சென் பீற்றர் வினாவ, 'நான் நடந்துதான் வந்தேன்' என்றான் கறுப்பன். 'வாகனத்தில் வராதபடியால் நீ உள்ளே செல்ல முடியாது' எனப் பீற்றர் கூறிவிட்டு உள்ளே சென்று விட்டார்.

கறுப்பன் அந்த இடத்தை விட்டகன்றான். அவன் ஐந்து மைல்கள் அந்த வீதி வழியே திரும்பி வரும் பொழுது, ஒரு வெள்ளையனைச் சந்தித்தான். 'வெள்ளை மனிதரே நீர் எங்கே செல்கிறீர்?' எனக் கறுப்பன் வினாவினான். 'நான் மோட்சத்திற்குப் போய்க்கொண்டிருக்கின்றேன்' என்றான் வெள்ளையன். 'நடந்து சென்றால் நீ மோட்சத்திற்குச் செல்ல முடியாது. அவர்கள் உன்னை உள்ளே போக விட மாட்டார்கள்.' எனக் கூறினான் கறுப்பன். 'நான் உனக்கு ஒரு குதிரையாக இருப்பேன். நீ கால்களைப் பரப்பி என் மேல் ஏறி இருந்துகொண்டு மோட்சத்திற்குப் போகலாம். நீர் மோட்ச வாசலை அடைந்ததும் கதவைத் தட்ட பீற்றர் வந்து நீ யார் என்று கேட்கும் பொழுது, நான் வெள்ளையன் என்று கூறினால், நீங்கள் ருவரும் உள்ளே வரலாம் என்பார்' எனக் கூறினான் கறுப்பன்.

'மிகவும் நன்று. நீ குனிந்து நில். நான் உன் முதுகின்மேல் ஏறியிருக்கின்றேன்' என்றான் வெள்ளையன். கறுப்பன் குனிந்த நிற்க வெள்ளையன் தன் கால்களைப் பரப்பி, அவனுடைய முதுகில் ஏறி இருந்தான். அவர்கள் இருவரம் மோட்ச வாசலை அடைந்தனர்.

வெள்ளையன் கதவைத் தட்டினான். 'யார் அங்கே?' எனக் கேட்டபடி பீற்றர் வந்தார். 'அது நான்' என்றான் வெள்ளையன். 'நீ நடந்து வந்தாயா அல்லது வாகனத்தில் சவாரி செய்துகொண்டு வந்தாயா?' என்று கேட்டார் பீற்றர். 'நான் சவாரி செய்துதான் வந்தேன்' என வெள்ளையன் கூறினான். 'சரி நீர் உள்ளே செல்லலாம். உன்னுடைய குதிரையை வெளியே கட்டி வைத்துவிட்டு உள்ளே போகலாம். . சென் பீற்றர் பீடிகையுடன் கூறினார்.

# மாற்றுக் கலாசாரத்தளம் எமக்கு அவசியந்தானா?

**நீர்வை. பொன்னையன்.**

எமது நாடு இன்னும் அரை நிலப் பிரபுத்துவ, அரைக் காலனித்துவ நாடாகத் தானிருக்கின்றது. அரசியல், பொருளாதார, கலாசாரத் துறைகளில் இன்னும் நிலப் பிரபுத்துவத்தினதும் காலனித்துவத்தினதும் எச்ச சொச்சங்கள் அப்படியேதானிருக்கின்றன. இங்கு முதலாளித்துவம் வளர்ச்சியடையாத நிலையிலுள்ளது. அதே வேளை, உலகமயமாக்கனூடாக பல் தேசியக்கம்பெனிகளின் ஊடுருவலுக்கும் ஆக்கிரமிப்புக்கும் எமது நாட்டின் கதவுகள் அகலத் திறந்து விடப்பட்டுள்ளன. முதலாளித்துவ ரீதியில் வளர்ச்சியடையாத நிலையிலுள்ள எமது நாடு நவீன காலனித்துவ பல்தேசியக்கம்பெனிகளின் சவால்களுக்கும் ஆக்கிரமிப்புக்கும் ஈடுகொடுக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றன.

கலாசாரம் தேசத்தின் ஆத்மா. அது தாயின் இதயத்தைப் போல மென்மையானது. விசாலமானது, 'தேசங்களை உருவாக்குபவர்கள் கவிஞர்களும் கலைஞர்களும்தான். அரசியல்வாதிகளும் வர்த்தகர்களுமல்ல' என்று உலகப் புகழ் பெற்ற கலை வித்தகர் ஆனந்தக் குமாரசுவாமி கூறியுள்ளார்.

ஈழத்தின் கலாசாரக் கட்டமைப்பிலும், கலாசாரச் செயற்பாடுகளிலும் மேலாதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கின்ற சக்திகள் எவை? கலாசாரக் கட்டமைப்பை வடிவமைப்பதில் மறைமுகமாகவும் நேரடியாகவும் மேலாதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கின்ற சக்திகள் எவை? என்பதை அடையாளம் காண்பது பயன் தரும் ஒரு விடயமாக இருக்கின்றது.

**கலாசாரத்துறையில் அரசின் மேலாதிக்கம்**

இலங்கை சுதந்திரமடைந்து ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. அன்றிலிருந்து இன்று வரை எமது நாட்டின் கலாசாரத்தை வடிவமைத்து உருவாக்குவதில் பொதுமக்கள் ஏதாவது சிறிதளவு பங்கைச் செலுத்தியுள்ளார்களா? இல்லை என்று தான் கூறவேண்டும். அவர்கள் தங்கள் பங்கைச் செலுத்துவதற்கு அரசும், அதற்குப் பக்க பலமாக உள்ள சுரண்டும் வர்க்கமான வர்த்தக சமூகமும் எள்ளளவேனும் இடம் விட்டு வைக்கவில்லை. இவ்விரு சக்திகளும் தான் எமது நாட்டின் கலாசாரத்தின் கட்டமைப்பை வடிவமைத்து செயற்படுத்துவதில் பிரதான சக்திகளாக இருந்து வந்துள்ளன. அரசைப் பொறுத்த வரை கலாசாரத்தை வடிவமைப்பதிலும் செயற்படுத்துவதிலும் இரு வழிகளில் அது பிரதான சக்தியாக இருந்து வருகின்றது.

மக்களின் எண்ணக்கருவை உருவாக்குதில் அரசு தானே ஒரு கலாசார சக்தியாக நேரடியாக இயங்கி வருகின்றது. உதாரணமாக பிரித்தானிய எலிசபெத் மகாராணியின் அரச மாளிகையின் வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வெஸ்ற்மினிஸ்ரர் பாணி பாதுகாவலரைப் போலவே, இலங்கை ஜனாதிபதி மாளிகையில் பாதுகாவலர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். பாராளுமன்றத் திறப்பு விழாக்களின் போதும் அதன் கூட்டத்தொடர் ஆரம்ப காலங்களின் போதும் நடைபெறுகின்ற சடங்குகள், சம்பிரதாயங்கள் மூலம் அரசு மக்களின் மனதில் தனது உயர்ந்த உன்னத ஸ்தானத்தை பதிய வைக்கும் நோக்குடன் தான் செயற்பட்டு வருகின்றது.

தேசிய தினக் கொண்டாட்டங்களின் போது கடந்த கால ஜனாதிபதிகள் நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்துவதற்கு பௌத்த மக்களின் புனித சின்னமான கண்டியிலுள்ள தலதா மாளிகையின் எண்கோண மண்டபத்தை உபயோகித்

தனர். தேசிய தினமும் சுதந்திர தினமும் பௌத்த சிங்கள மக்களுக்கு மாத்திரம் தான் என்ற உணர்வை மக்களுடைய மனதில் பதியவைக்கும் நோக்கநதான் அந்த ஜனாதிபதிகளுடைய மனதில் இருந்திருக்க வேண்டும்.

அரசு ஏர் பூட்டு விழாக்கள் அனுராத புரம் பாண்டுநுவரவெவாவில் ஏற்பாடு செய்து வருகின்றதும் கடந்த கால ஜனாதி பதிகள் இருவரும் தத்தமது காலங்களில் இவ்வேர் பூட்டு விழாக்களில் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டு 'அமுடைகளைக்' (கௌபீனம்) கட்டிக் கொண்டு வயல்களில் இறங்கி உழுது, விவசாயிகளுடன் சேர்ந்து உணவருந்தினர். ஒரு ஜனாதிபதி தனது பிறந்ததின விழாக் கொண்டாட்டங்களின் போது புறாக்களை விடுதலை செய்து பறக்க விட்டார்.

திருவாளர் ஜே.ஆர். ஜெயவர்த்தன பிரதமராக ஒருதடவை சேவையாற்றினார். இக்காலப்பகுதியில் பழங்கால மன்னர்க ளைப் போல, தான் உயிருடன் இருக்கும் பொழுதே தனது சிலையை வடித்து வைத்தார். தனது சிலையை காலிமுகத் திடலிலிருந்த பாராளுமன்றத்தில் இந்திய பிரதமராயிருந்த மொறார்ஜி தேசாயைக் கொண்டு திறந்து வைத்தார். இத்துடன் திரு. ஜெயவர்த்தன ஜனாதிபதியாக இருந்தபொழுது தனது பெயரை நிலை பெறச் செய்வதற்கு மற்றுமொரு கைங்கரி யத்தைச் செய்தார். கோட்டே இராஜ்யம் முன்னொரு காலத்தில் ஜெயவர்த்தன என்றொரு மன்னனால் ஆட்சி செய்யப் பட்டது. இதை ஆதாரமாகக் கொண்டு கோட்டேயில் ஜயவர்த்தனபுரம் என்ற பெயரை நிறுவினார். அத்துடன் காலிமுகத் திடலிலிருந்த பாராளுமன்றத்தை ஜயவர்த் தனபுரத்திற்கு மாற்றினார். ஜயவர்த்தனபுரத் திலுள்ள புதிய பாராளுமன்றக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு பலகோடி ரூபாக்களைச் செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. திருவாளர் பிரேமதாச கூட தனது பிறந்த தினத்தில் கிராமோதய விழாக்களை நாட்டின் பல பகுதிகளில் மிக டாம்பீகமாக கொண்டாடினார். அத்துடன் அன்றைய தினம் நூற்றுக் கணக்கான புறாக்களைப் பறக்க விட்டு விடுதலை செய்து வந்தார்.

இப்படியான செயல்கள் மூலம் இலங் கையின் கடந்தகால அரசுத்தலைவர்கள் தாங்களும் கடந்த கால மன்னர்கள் போல உயர் ஸ்தானத்தில் உள்ளவர்கள் என்ற நிலப்பிரபுத்துவ கருத்துக்களை மக்கள் மனதில் பதிய வைக்கும் நோக்குடன் எமது நாட்டின் கலாசாரத்தை தங்கள் விருப்பத் திற்கமைய கலாசாரத்தை நேரடியாகவே வடிவமைத்தனர். இச்செயல்கள் அரச சக்தியின் நேரடித்தலையீடு. இன்று கூட இச்செயற்பாடு தொடரத்தான் செய்கின்றது.

மேலும் அரசு பல்வேறு நிறுவனங் களை ஸ்தாபித்து இவை மூலம் கலாசாரத் துறையில் தனது மேலாதிக்கத்தை நிலை நிறுத்திக் கொண்டிருக்கின்றது. கலாசார அமைச்சு, இந்து கலாசார பண்பாட்டுத் திணைக்களம், முஸ்லீம் கலாசார பண் பாட்டுத் திணைக்களம், பௌத்த சாசன அமைச்சு, கலாசார சபை, சாஹித்திய மண்டலம், மாவட்ட கலாசார நிலையங்கள் போன்ற பல நிறுவனங்களை அரசு ஸ்தா பித்து அவை மூலம் கலாசாரத்துறையில் தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டி வருகின்றது.

அரச பொதுஜனத் தொடர்பு ஊடகங் களையும் தனது ஆதிக்கத்தின்கீழ் வைத்து செயற்பட்டு வருகின்றது. ஏரிக்கரைப் பத்திரிகைகள், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினிக் கூட்டுத் தாபனம், தேசிய திரைப்படக் கூட்டுத் தாபனம், அரசாங்க திரைப்படப் பிரிவு ஆகியவற்றை தகவல் துறை அமைச்சின் கீழ் வைத்து, ஊடகங்கள் மூலமும் தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டி வருகின்றது. கல்விசார் நூல்களைக் கூட அரசு விட்டு வைக்கவில்லை. பாடசாலைப்பிள்ளைகள் படிக்கின்ற நூல்களினூடாகவும் கலாசாரத் துறையில் அரசு தனது மேலாதிக்கக் கருத்துக்களைத் திணித்து வருகின்றது. மொத்தத்தில் நோக்குமிடத்து அரசு நமது தேசத்தின் கலாசாரத்துறையை சிறைப்பிடித்து வைத்துள்ளது என்பதை எவரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

**வர்த்தக சமூகமும் கலாசாரமும்**

கலாசாரத்துறையில் அரசைப் போலவே உலகமயமாக்கலினூடாக பல்தேசியக்கம்பெனிகளின் மூலதனச் சந்தையும், அதாவது சுரண்டும் வர்க்கத் தைச் சார்ந்த வர்த்தக சமூகமும் தனது மேலாதிக்கத்தைச் செலுத்தி வருகின்றது. நமது நாடு சுதந்திரமடைந்த பின்னர் கலாசாரத்துறையில் வர்த்தகப்பிரிவினர் ஓரளவு செல்வாக்கைச் செலுத்தி வந்தனர். ஆனால் ஈழத்தில் திறந்த பொருளாதாரக் கொள்கையும் கட்டுப்பாடற்ற இறக்குமதியும் அமுல்படுத்தப்பட்ட பின்னர் மூலதனச் சந்தை கலாசாரத்துறையில் தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டத் தொடங்கி விட்டது. மூலதனச் சந்தையைச் சார்ந்தவர்கள் இருவழிகளில் தமது ஆதிக்கத்தைச் செலுத்தி வருகின்றனர்.

**கனவுகளை விற்பனை செய்தல்**

பல்தேசியக் கம்பனிகளின் மூலதனச் சந்தையைச் சார்ந்தவர்கள் நுகர்வுக் கலாசாரத்தை மக்கள் மீது திணிப்பதன் மூலம் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டு கின்றனர். குறைந்த முதலீட்டில் குறுகிய காலத்தில் கூடிய லாபத்தைப் பெற்றுக் கொள்வதுதான் நுகர்வுப் பொருளாதார வர்த்தகர்களின் பிரதான நோக்கம். நுகர்வுப் பொருட்கள் எவ்வளவு தரம் குறைந்தவை யாக இருந்தாலும் பாதகமில்லை. இப்பொருட்களை இவர்கள் குறைந்த விலையில் இறக்குமதி செய்கின்றார்கள். பின்னர் விளம்பர யுக்திகள் மூலம் மக்களின் மனதைக் கவர்ந்து இப்பொருட் களைக் கூடிய விலையில் விற்று கொள்ளை லாபமடிக்கின்றார்கள். இவர்க ளது வலுவான ஆயுதம் விளம்பரம்தான். பிரதான நோக்கம் கொள்ளை லாபம். மக்களின் சிந்தனையை மழுங்கடிக்கின்ற மிருக உணர்ச்சியையும் வன்முறையையும் தூண்டுகின்ற 'ஆபாச திரைப்படங்கள் வீடியோப் படங்கள், நூல்கள் ஆகிய வற்றைத் தாராளமாக இறக்குமதி செய்து பெரும் லாபம் பெறுகின்றனர். இப்பெருச்சாளிகள், இதன் மூலம் எமது கலாசாரத்தைப் பாழடிக்கின்றனர்.

மக்களின் விருப்பத்திற்கு மாறானவ ற்றை, அவர்கள் அறியாமலே, அவர்களு டைய மனதை மிகச் சாதுரியமாக, சூட்சுமமான வழிகளில் அடிமைப்படுத்தி, மக்களை ஏற்றுக் கொள்ள வைக்கும் விளம்பர தந்திரோபாயங்களையும் யுக்திகளையும் இவர்கள் கையாள்கின் றனர். வெகுஜன ஊடகங்களினூடாக ஒலி ஒளி சாதன விளம்பரங்கள், பத்திரிகை விளம்பரங்கள், சுவரொட்டிகள் ஆகிய பிரசார வழிமுறைகளைப் பயன்படுத்துவ தன் மூலம் மக்கள் தமக்கு விரோதமான வற்றைக் கூட தம்மை அறியாமலே விரும்பி ஏற்றுக்கொள்ளும் மனப்பான் மையை உருவாக்குவது ஒரு வழி. இது ''கனவுகளை விற்பனை செய்து" மக்களை ஏமாற்றுகின்ற முறையாகும்.

மேலும் இந்த ''கனவுகளை விற்பனை செய்தல்" வழிமுறை மூலம் மக்களின் கூட்டு மனப்பான்மையும் கூட்டுச் செயற்பாடும் சிதைத்து சீரழிக்கப்படு கின்றது. இதன் மூலம் ஒருவரிடமிருந்து மற்றவரை அந்நியப்படுத்தி தனிநபர் வாத த்தை உருவாக்குதல். ஒருவருடன் மற்ற வரை போட்டியும் பொறாமையும் சந்தேக மும் கொள்ளச் செய்தல். இதன் மூலம் ஒருவருடன் மற்றவர் மோதுகின்ற நிலைமை ஏற்படுகின்றது. இந்த வழிமுறை களைத்தான் சமூக விரோத வர்த்தகர்கள் கையாள்கின்றார்கள். இதன் மூலம் குடும்ப உறவு, பாசம், பற்று, கிராமப்பற்று, இனப்பற்று, தேசப்பற்று ஆகியவை அழிக்கப்படுகின்றது. தனிநபர் வாதமும் சுயநலமும் மேலோங்கி ''நாம்" என்ற ஆணவ உணர்வு மக்கள் மத்தியில் வளர் கின்றது. இதனால் மக்களைப் பிரித்துக் கூறு போடுகின்ற ஒரு தந்திரோபாயத்தை இந்த நுகர்வுப் பொருளாதார வர்த்தக சமூகம் கையாள்கின்றது. இதனால் கூட்டு மனப்பான்மையையும் கூட்டுச் செயற்பாட்டையும் அடிநாதமாகக் கொண்ட எமது நாட்டின் கலாசாரம் அழித்து நாசமாக்கப்படுகின்றது.

இரண்டாவதாக பல் தேசியக் கம்பெனிகளின் சந்தையைச் சார்ந்தவர்கள்

போதியளவு பணத்தை முதலீடு செய்து, தமது மேலாதிக்கத்தை நிலை நாட்டக் கூடிய கலாசார நிகழ்ச்சிகளைத் தயாரித்து நுகர்வுப் பொருளாதார சிந்தனையை மக்களின் உள்ளங்களில் திணிக்கின்றனர். மக்கள் மனதைச் சுண்டியிழுக்கின்ற ஜனரஞ்சகமான இசை நிகழ்ச்சிகள், கவர்ச்சிகர நடனங்கள், மேலோட்டமான ஆபாச நாடகங்கள் திரைப்படங்கள் ஆகியவற்றைத் தாங்களே முதலீடு செய்து தயாரித்து பிரபல்யப் படுத்தி வருகின்றனர். இதன் நோக்கங்கள் இரண்டு. முதலாவது மக்களுடைய ரசனையை மலினப்படுத்தி தவறான வழிக்கு கவர்ச்சி மூலம் திசை திருப்புவது. இரண்டாவது கொள்ளை லாபம். இதனால் மூலதனச் சந்தையைச் சார்ந்த சுரண்டல் வர்த்தகத்தினர் கலாசாரத்துறையைச் சிறைப்படுத்தி வைத்திருக்கின்றனர்.

### விளம்பரமும் பெண்களும்

மூலதனச் சந்தையைச் சார்ந்தவர்கள் தாராள இறக்குமதியைப் பாவித்து ஆடம்பரப் பொருட்களை பெருமளவு இறக்குமதி செய்கின்றனர். இதனால் பெரும் வர்த்தகப் போட்டி ஏற்படுகின்றது. தங்கள் பொருட்களை கூடிய விரைவில் விற்பனை செய்து பெரும்லாபம் ஈட்டுவதற்கு விளம்பரத்துறையை ஒரு வலுவான ஆயுதமாகப் பாவிக்கின்றனர், இந்த மூலதனச் சந்தையைச் சார்ந்தவர்கள். விளம்பரத்துறையிலும் கடும் போட்டி உண்டு. இந்தப் போட்டியில் பலியாவது பெண்கள்.

மூலதனச் சந்தை நுகர்வுப் பொருளாதாரத் துறையைச் சார்ந்தவர்கள் விளம்பரத் துறையில் பெண்களை மாத்திரம்தான் கூடுதலாகப் பயன்படுத்துகின்றனர். ஆடம்பரப் பொருட்களக்கு விளம்பரம் செய்யும் பொருளது பெண்களை மையமாக வைத்துத்தான் விளம்பரங்கள் தயாரிக்கப்படுகின்றன. கவர்ச்சிகரமான பெண்களை விளம்பரங்களில் பயன்படுத்துகையில் விளம்பரம்படுத்தப்படும் பொருட்களை வாங்குவதற்கு பெண்களைத் தூண்டுவது ஒரு நோக்கம். அதேவேளை விளம்பரப்படுத்தப்படும் பண்டத்துடன் விளம்பரத்தில் தோன்றுகின்ற பெண்ணும் ஒரு வியாபாரப் பண்டமாகக் கருதப்படுகின்றாள். அது மாத்திரமல்ல பெண்ணும் வியாபாரப் பண்டமாகப் பயன்படுத்தப்படுகின்றாள்.

விளம்பரத்துறையில் பெண் ஒரு கவர்ச்சிப் பண்டமாகக் கையாளப்படுகின்றாள். எமது கீழைத் தேச பாரம்பரியத்திற்கும் பண்பாட்டிற்கும் கலாசாரத்திற்கும் ஒவ்வாத வகையில், பெண்குலத்தையே அவமானப் படுத்தும் வகையில் பெண்கள் கவர்ச்சிப் பண்டமாகப் பயன்படுத்தப்படுகின்றனர். நுகர்வுப் பொருளாதாரத் துறையையும் விளம்பரத் துறையையும் சார்ந்த பெரும்பாலான நவீன துச்சாதனர்கள் தங்களது விளம்பரங்களில் பெண்களை மையமாகப் பயன்படுத்தி துகிலுரி படலத்தையும் நடத்தி வருகின்றனர். பெண்குலத்தையே அவமானப்படுத்துகின்ற சீர்கெட்ட செயலை தட்டிக் கேட்க எவருமே முன்வருவதில்லை

### ஆணாதிக்க கலாசாரம்

நுகர்வுப் பெருளாதார விளம்பரத் துறையில் ஆதிக்கம் செலுத்துபவர்கள் ஆண்களே. இவர்கள்தான் பெண்களை விளம்பரங்களில் வியாபாரப் பண்டமாகப் பாவிக்கின்றனர். அது மாத்திரமல்ல கலாசாரத்தின் பிரதான அம்சமான கலை இலக்கியத் துறையிலும் ஆணாதிக்கம் தான் தலை தூக்கி நிற்கின்றது. சிறுகதை நாவல்களின் முன் அட்டைகளைப் பார்த்தால் இது நன்றாகப் புலப்படும். அசுர வேகத்தில் விற்பனையாகின்ற அநேக நூல்களின் முன் அட்டைகளில் பெண்களின் கவர்ச்சிகரமான படங்களைப் பார்க்கலாம். இலக்கியத்துறையிலும் பத்திரிகைத் துறையிலும் மற்றும் ஒலி, ஒளிபரப்பு ஊடகங்களிலும் ஆண்களின் மேலாதிக்கத்தைக் காணலாம். அது மாத்திரமல்ல. இலக்கியப் படைப்புக்களில் பெரும்பாலானவற்றில் பெண் பாத்திரங்கள் மலினப்படுத்தப்பட்டுக் காணக் கிடக்கின்றன. இந்த அசமத்துவப் போக்கு எமது கலை இலக்கியத்துறையின் வளர்ச்சிக்கு குந்தகமாயுள்ளது.

எமது நாட்டில் மேலாதிக்க சக்திக ளுக்கிடையில் சிக்கி சிறைப்பட்டிருக்கின்ற எமது கலாசாரத்தை நாம் எப்படி விடுவிப்பது? இச்சக்திகளால் விடப்படுகின்ற சவால்களுக்கு முகம் கொடுக்க எமக்குப் போதிய ஆத்ம பலமுண்டா? பொதுமக்க ளின் நலன்களைப் பேணுகின்ற. மனித உரிமைகளை அடிநாதமாகக் கொண்ட ஜனநாயக பாரம்பரியத்தையுடைய ஒரு கலாசாரத்தின் உருவாக்கத்திற்கும் செயற்பாட்டிற்கும் இங்கு இடம் உண்டா? இது சாத்தியப்படுமா என்ற கேள்விகள் எம்முன் எழுந்து நிற்கின்றன. எமது கடந்த காலத்தை நாம் திரும்பிப் பார்க்கையில், சுதந்திரத்திற்கு முந்திய காலப்பகுதியிலோ அல்லது அதற்குப் பின்னரோ இந்தியா வைப் போல ஆத்ம பலமுள்ள, வலுவான கலாசாரத்தையோ சிவில் சமூகத்தையோ நாம் கட்டி எழுப்பத் தவறி விட்டோம். எமது சிவில் சமூகம் மிகவும் பலவீனமான நிலையிலுள்ளது.

## இந்திய கலாசாரமும் ஆத்ம பலமும்

இந்தியாவைப் பொறுத்த மட்டில் இந்து க்கள் பெரும்பான்மையினராக இருந்தும் கூட, அந்த நாடு மதச்சார்பற்றது என்ற உணர்வுடன் சுதந்திரப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தது. அதேவேளை, ஏக காலத்தில் கலாசாரத் துறையையும் ஆத்மீகத் துறையையும் இணைத்து ஆத்ம பலமுள்ள சிவில் சமூகத்தைக் கட்டி எழுப்பி சுதந்திரப் போராட்டத்தில் ஈடபட் டது. வங்கத்தின் கலாசார இமயங்களான பங்கிம் சந்தர், ரவீந்தரநாத் தாகூர், சரத் சந்தர், வட இந்தியாவில் பிரேம் சந்த், முல்க்ராஜ் ஆனந்த், கிஷன் சந்தர், ஜஸ்பால், கேரளத்தில் குமரன் ஆசான், தகழி, வைக்கம் முகமது பஷீர், கன்னடத்தில் நிரஞ்சனா, தமிழகத்தில் திரு வி.க. பாரதி போன்றோர் வலுவான கலாசார இயக்க த்தை நடத்தி, சாதனைகளை நிலைநாட்டி னர். அதேவேளை ஆத்மீகத் துறையை சுதந்திரப் போராட்டத்தை இணைத்து ஒரு வலுவான சிவில் சமூகத்தை கட்டி எழுப்புவதில் அளப்பரிய பங்குகளை ஆற்றினர். சில ஆத்மீகத் தலைவர்கள், அரவிந்தர், டாக்டர் ராதாகிருஷ்ணன், மகாத்மா காந்தி போன்ற ஆத்மீகத்தலை வர்களை நாம் குறிப்பிடலாம். இந்த கலாசார சிவில் சமூகங்கள் எந்தப் புயலுக்கும் தாக்குப் பிடிக்கக்கூடிய வகையில் இமாலயமாக தலை நிமிர்ந்து நின்று மகத்தான சாதனைகளை இன்றும் கூட நிலைநாட்டி வருவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

## ஈழ கலாசாரமா? அல்லது பௌத்த சிங்கள கலாசாரமா?

ஈழத்தைப் பொறுத்தவரை கலாசாரச் செயற்பாடுகள் ஒருபுறமிருக்க மதங்கள் குறிப்பாக பௌத்த மத நிறுவனங்களின் செயற்பாடுகள் கவலைக்குரியதாகவே இருக்கின்றது. ஆத்மீகத் துறையில் செயலாற்ற வேண்டிய பௌத்த மத நிறுவனங்கள் அதை விடுத்து அரசின் ஒரு பகுதியாகவே செயற்பட்டு வருகின்றன. இலங்கை பல தேசிய இனங்களையும் பல மதங்களையும் கொண்ட ஒரு நாடு என்பதை கவனத்தில் கொள்ளாமல் அரசும் பௌத்த மத நிறுவனங்களும் செயற்பட்டு வருகின்றன. இலங்கை பல்லினங்களைக் கொண்ட நாடு. அதன் கலாசாரம் பல்லின கலாசாரங்களை உள்ளடக்கிய ஒரு ஈழக்கலாசாரமாகவே அமைந்திருப்பது அவசியம். ஆனால் பதவியிலுள்ள அரசாங்கங்கள் இலங்கை பௌத்த சிங்கள கலாசாரத்தை உடைய நாடு என்ற உணர்வுடன்தான் செயலாற்றுகின்றன. அரச வைபவங்களில் பௌத்த மகாசங்கத் தினர் தீவிரமாகப் பங்கு பற்றி வருவதோட ல்லாமல் அவர்களுக்குத்தான் எப்பொழு தும் முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. அதேவேளை அரசும் பௌத்த மதத்தை தன்னில் ஒரு பகுதியாக நினைத்து செயற்படுகின்றது. தேசியதினத்தன்றும் தலதாமாளிகையின் எண்கோண மண்டபத் திலிருந்து நாட்டு மக்களுக்கு உரை யாற்றுவதற்கு அவ்விடத்தைத் தேர்ந்தெடு த்த செயலே இலங்கை சீர்திருத்தமும் வேண்டாம் சமாதானப் பேச்சும் வேண்டாம். ''உத்தேச சமாதானப் பேச்சுவார்த்தை நாட்டுக்கப் பயனளிக்கப் போவதில்லை. தீமையே விளைவிக்கும்." என்ற அபாய அறிவிப்பையும் மகாசங்கத்தினர்

விடுவித்துள்ளனர். இந்தத் துர் அதிஷ்டவசமான நிலை இன்று நேற்றல்ல, நீண்ட காலமாகவே இருந்து வருகின்றது. பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்கா பிரதமராக இருந்த பொழுதே மொழிப் பிரச்சினையைத் தீர்க்க முயன்றார். அவர் பண்டா செல்வா ஒப்பந்தத்தை அமுல்படுத்த முயன்ற பொழுது பௌத்த மதத் தலைவர்களும் பௌத்த குருமாரும் புகழ் பெற்ற கண்டி யாத்திரையை நடத்த முற்பட்டு, அந்த ஒப்பந்தத்தைக் கைவிட திரு. பண்டாரநாயக்காவை நிர்ப்பந்தித்தனர். அந்த மொழிப் பிரச்சினை இனப்பிரச்சினை யாகி கொடிய யுத்தமாக மாறிவிட்டது. அரசியலில் மதம் தலையிடுவதையும் மதத்தில் அரசு தலையிடுவதையும் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். இதற்கு ஏற்றவழி மதத்தின் பிடியிலிருந்து அரசை விடுவிக்க வேண்டும். அரசின் பிடியிலிருந்து மதத்தை விடுவிக்க வேண்டும். அப்போதுதான் எமது நாட்டில் நிரந்தரமான சாந்தியும் சமாதானமும் நிலவும். ஆரோக்கியமான ஒரு கலாசாரத்தை நாம் நிர்மாணிக்க முடியும்.

எமது நாட்டில் கலாசாரத்துறை நீண்ட காலமாக அரசின் பிடியில் சிறைப்பட்டிருக் கின்றது. அதே போல நீண்ட கால யுத்தத் தின் காரணமாகவும் சுரண்டும் வர்க்கமான மூலதனச் சந்தைச் சமூகத்தினதும் மேலா திக்கத்தின் கீழ் சீரழிந்து வன்முறைக் கலாசாரமாகவும் மாறிவிட்டது. இந்தச் சூழ்நிலையில், ஒரு மாற்றுக் கலாசாரம் பற்றி அதாவது அரசின் பிடியிலிருந்தும் மூலதன சந்தையைச் சார்ந்த சுரண்டல் வர்க்கத்தினதும் மேலாதிக்கத்தின் கீழிருந்தும் விடுவிக்கப்பட்ட ஒரு மாற்றுக் கலாசாரத்தை நிறுவுவது பற்றிச் சிந்தித்ததால் என்ன? இக்கலாசாரம் மனித உரிமைகளை உத்தரவாதப்படுத்துகின்ற, ஜனநாயகக் கோட்பாடுகளை அடிநாதமா கக் கொண்ட, பல்லின மக்களாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய மாற்றுக் கலாசாரத்தை நிர்ணயிப்பதுபற்றி ஏன் சிந்திக்கக்கூடாது? இது சாத்தியப்படுமா? என்று சிலர் கேட்க லாம். நிச்சயமாக அது சாத்தியமாகும் என்பதற்கு கடந்தகால நிகழ்வுகள் சான்று பகர்கின்றன. இந்தப் பணியை மேற்கொள் வதற்கு கலைபூர்வமாகவும் எழுத்தாளர்க ளையும் உள்ளடக்கிய ஆத்ம சக்தி வாய் ந்த சிவில் சமூகத்தைக் கட்டி எழுப்புவது அவசியமாக இருக்கின்றது.

இலங்கை அரசின் ஆதிக்கத்தின் கீழ் நீண்ட காலமாக சாஹித்திய மண்டலம் இயங்கி வருகின்றது. இந்த நிறுவனம் ஆண்டு தோறும் கலாசார விழாவை நடத்தி வருவதுடன் சாஹித்திய மண்டலக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்கிய நூல்களுக்கு பணப்பரிசும் விருதும் வழங்கி வருகின்றது. இந்த விருதுகளுக்கான நூல்களைத் தெரிவு செய்வது சாஹித்திய சபைக்குழுவாக இருந்தாலும் இறுதி முடிவு கலாசார அமைச்சின் அதிகாரிகளாலும் அமைச்சாலும் அங்கீகரிக்கப்பட வேண்டும். இச்செயலிலிருந்து கலாசார அமைச்சின் ஆதிக்கம் கலாசாரத் துறையில் எந்தள விற்கு உள்ளது என்பதை நாம் உணர முடிகின்றது.

ஆட்சியினரது மேலாதிக்கத்திலிருந்து கலாசாரத் துறையை விடுவித்து சுதந்திர மாக இயங்க வைக்கும் நோக்குடன் விபவி கலாசார மையம் அரசின் கலாசார விழாவி ற்கும் கலாசார செயற்பாடுகளுக்கும் மாற்றாக ஆண்டு தோறும் சுதந்திர இலக் கிய விழாவை நடத்தி வருகின்றது. அத்துடன் அகில இலங்கை ரீதியில் தமிழ், சிங்கள இலக்கிய நூல்களில் சிறந்தவற்றி ற்குப் பணப் பரிசும் விருதுகளும் வழங்கப் பட்டு வருகின்றது. சிறந்த நூல்களைத் தெரிவு செய்யும் பணியை ஒரு சுதந்திர மான மதிப்பீட்டுக்குழு செய்து வருகின் றது. இந்த மதிப்பீட்டுக் குழுவின் தேர்வு தான் இறுதி முடிவு. இதில் எவரும் தலை யிட முடியாது. அது மாத்திரமல்ல, இந்த மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை வெளியிடு வதற்கு முன்னர் எழுத்தாளர்களைக் கூட்டி, இக்கூட்டத்தில் இந்த மதிப்பீட்டுக்குழு அறிக்கை விவாதிக்கப்பட்ட பின்னர்தான் விழாவில் விருதுகள் பற்றிய விபரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றது. இது ஒரு மாற்றுக் கலாசார செயற்பாடு என்பதை எழுத்தாளர்களும் கலைஞர்களும் புத்திஜீ விகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஈழம் பல்லின சமூகங்களைக் கொண்ட ஒரு தேசம். இங்கு பல கலாசாரங்கள் உள்ளன. ஆகவே சகல இனங்களது கூட்டுக் கலாசார உரிமைகள் பேணிப் பாதுகாப்பது அரசின் கடப்பாடாக இருக்கின்றது. ஷஷிகலைஞர்களின் சுயாதீனத்தைக் கௌரவித்து, கலைகள் மீது அரசு மறைமுகமாக தலையீடு செய்வதை இல்லாதொழிக்கும் அதே வேளை கலைகளுக்குக் குறிப்பிடத்தக்க அனுசரணை வழங்கப்படும்" என்று இன்றைய அரசாங்கம் தனது உத்தியோகபூர்வமான கொள்கைப் பிரகடனத்தில் வெளிப்படுத்தியுள்ளது. இப்படிக் கூறியிருந்தபோதும், 1996 ஆம் ஆண்டு இதே அரசு கலை கலாசாரம் சம்பந்தமான உத்தேச சட்ட வரைவுகள் நான்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து சட்டமூலமாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இச்சட்ட வரைவுகளில் ஈழத்தின் பௌத்த சிங்கள மக்களின் ஒரு பகுதியினரைத் தவிர ஏனைய இன, மத மக்களின் கலாசார உரிமைகளுக்கு எவ்வித உத்தரவாதமும் கொடுக்கப்படவில்லை. அத்துடன் இச்சட்டமூலத்தின் மூலம் கலாசார அமைச்சருக்கும் கலாசார அமைச்சின் உயர் அதிகாரிகளுக்கும் கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இந்தச் சட்டமூலங்களில் ஈழத்தின் கலாசாரத்தை உருவாக்குவதிலும், கலாசார கொள்கையை வகுப்பதிலும், அதை நடைமுறைப்படுத்துவதற்கு இந்த நாட்டின் எழுத்தாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் எதுவித இடமும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

கலாசாரம் சம்பந்தமான இந்நான்கு சட்ட வரைவுகளுக்கும் எதிராக, ஈழத்திலுள்ள பிரசித்தி பெற்ற முன்னணி எழுத்தாளர்களும் கலைஞர்களும் புத்திஜீவிகளும் ஒன்றிணைந்து போர்க்குரலெழுப்பினர். அத்துடன் அரசுக்கு அழுத்தத்தைக் கொடுக்கும் வகையில் தீவிரமாகச் செயற்பட்டனர். சிறந்த கலைஞர்கள் விபவி மாற்றுக் கலாசார மையத்தின் அனுசரணையுடன் கலைஞர் எழுத்தாளர்களுக்கான ஒரு விரிவான கூட்டத்தை நடத்தி செயற்பாட்டிற்கான ஒரு அமைப்புக் குழுவைத் தேர்ந்தெடுத்தனர். இந்தச் செயற்பாட்டுக்கான அமைப்புக் குழுவின் பிரதிநிதிகள் கலாசார அமைச்சரைச் சந்தித்தனர். இவர்கள் அமைச்சருடன் இருதடவைகளும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இக் குழுவினர் கொடுத்த அழுத்தம் காரணமாக கலாசாரம் சம்பந்தமான நான்கு சட்ட வரைவுகளும் சட்டமாக்குவதற்கு பாராளுமன்றத்திற்கு கலாசார அமைச்சர் சமர்ப்பிக்காமல் கைவிட்டனர். அது மாத்திரமல்ல கலைஞர் எழுத்தாளர்களின் செயற்பாட்டுக் குழு ஒரு மாற்றுக் கலாசாரத்திற்கான நகல் அறிக்கையையும் தயாரித்து கலாசார அமைச்சுக்கு கடைசிப் பேச்சுவார்த்தையின் போது சமர்ப்பித்தது.

**ஆத்ம பலமுள்ள சிவில் சமூகம் வேண்டும்.**

இன்றைய சூழலில் ஈழத்திற்கு ஒரு மாற்றுக் கலாசாரத் தளம் அவசியம். இத்தளத்தை அமைப்பதற்கு இந்தியாவைப் போல, ஆத்ம பலம் வாய்ந்த ஒரு சிவில் சமூகத்தால்தான் உருவாக்க முடியும். இந்த நாட்டிலுள்ள கலைஞர்கள், எழுத்தாளர்கள், புத்திஜீவிகள், மற்றும் முற்போக்கு எண்ணம் கொண்ட அனைவரையும் உள்ளடக்கிய இன,மத, பால் பேதமற்ற ஒரு சிவில் சமூகத்தைக் கட்டி எழுப்புவது அவசர அவசியமாக இருக்கின்றது. இது வரலாற்றுத் தேவையும் கூட. இதற்கான அடித்தளம் இடப்பட்டு வருகின்றது. ஆகவே கலை வித்தகர் ஆனந்தக்குமாரசுவாமி அவர்கள் கூறியுள்ளதைப்போல "வணிகர்களும் அரசியல்வாதிகளுமல்லாமல், கவிஞர்களும் கலைஞர்களும் புத்திஜீவிகளும் ஒன்றிணைந்து ஒரு சக்திவாய்ந்த சிவில் சமூகத்தைக் கட்டி எழுப்பி, ஓரணியில் திரள வேண்டும். சிவில் சமூகத்தின் மூலம் அரசினதும் மூலதனச் சந்தையின் சுரண்டல் வர்த்தகத்தினதும் மேலாதிக்கப் பிடியிலிருந்து கலாசாரத்தை விடுவிக்க வேண்டும். இதைத் தொடர்ந்து மக்களின் நலனைப் பேணுகின்ற, மனித உரிமைகளைக் கௌரவிக்கின்ற, ஜனநாயகக் கோட்பாடுகளின் அடிப்படையில் சகல இன, மத மக்களாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அவர்களது உரிமைகளை உத்தரவாதப்படுத்துகின்ற ஒரு மாற்றுக் கலாசாரத்தை ஈழமக்கள் கலாசாரத்தை அமைப்பதில் ஆத்ம சுத்தியுடன் உழைக்க வேண்டும்.

# மாக்சியமும் பின்நவீனத்துவமும்

மாக்சியம் உலகளாவிய ஒரு சிந்தனை முறையாகும். இனம், மொழி, மதம், தேசம் கடந்த பாட்டாளி வர்க்க சர்வதேசியம் பற்றி அது பேசுகிறது; முழுமையான மனித விடுதலை பற்றிப் பேசுகிறது. அதற்கான வழிமுறைகளைப் பேசுகிறது. அவ்வகையில் உலகை முழுமையாகப் புரிந்து கொண்டு அதை மாற்றியமைக்க முனையும் ஒரு தத்துவமாகும். பின்நவீனத்துவம் இத்தகைய முழுமையான பார்வையை நிராகரிக்கிறது. அதை ஒரு பெருங்கதையாடல் என்று விபரிக்கின்றது. உலகை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது; உலகளாவிய தத்துவம் என்று ஒன்று இருக்க முடியாது என்று பின்நவீனத்துவம் கூறுகின்றது. அவ்வகையில் அது கூறுபடுத்தலை (FRAGMENTATION) முதன்மைப்படுத்துகின்றது. அவ்வகையில் பார்த்தால், பொருளாதார ரீதியில் பூகோளமயமாக்கல், அரசியல் ரீதியில் கூறுபடுத்தல் என்ற பல்தேசிய முதலாளித்துவத்தின் அபிலாசைகளையே பின்நவீனத்துவம் முன்மொழிகின்றது. மாக்சியம் கோட்பாட்டளவில் கலை இலக்கியத்தில் யதார்த்த வாதத்தையே முதன்மைப் படுத்துகின்றது. மூன்றாம் உலகச் சூழலில் யதார்த்த வாதத்திற்கு இன்னும் ஒரு வலுவான தளம் இருக்கிறது என்பதே என் அபிப்பிராயம்.

# அமெரிக்காவில் துப்பாக்கிக் கலாசாரம்

அமெரிக்காவில்

1. வருடாந்தம் 32000 பேர் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியாகிக் கொண்டிருக்கின்றனர்.
2. இதில் 4200 பேர் சிறுவர்களும் குழந்தைகளுமாவர்.
3. 1997 ல் 32,436 பேர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர்.
4. நாளாந்தம் இளவயதினர் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்.

2000 ம் ஆண்டு மே மாதம் 14 ம் திகதி வாஷிங்டனில் ஒரு லட்சம் தாய்மார் துப்பாக்கிச் சூட்டுக் கலாசாரத்திற்கு எதிராக ஊர்வலம் நடத்தினர்.

# யுத்தமும் சிறுவர்களும்

1. சீராலியோனிலிருந்து இலங்கைவரை கிளர்ச்சிக் குழுக்களால் 300,000 சிறுவர்கள் ராணுவங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
2. 1958 லிருந்து 1996 வரையான காலப்பகுதியில் 20 லட்சம் சிறுவர்கள் யுத்தங்களில் கொல்லப்பட்டள்ளனர்.
3. 1986 லிருந்த 1996 வரை 60 லட்சம் சிறுவர்கள் யுத்த மோதல்களில் படுகாயமடைந்துள்ளனர்.
4. 1986 லிருந்து 1996 காலப்பகுதியில் 20 லட்சம் சிறுவர்கள் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர்.
5. அங்கோலா, கொங்கோ ஜனநாயகக் குடியரசு ஆகிய இடங்களில் 13 லட்சம் சிறுவர்கள் தங்கள் சொந்த நாடுகளிலிருந்து இடம் பெயர்ந்துள்ளனர்.
6. ஆபிரிக்காவில் மட்டும் 12000 சிறுவர்கள் போர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப் பட்டள்ளனர்.
7. இலங்கை, மியன்மார், கம்போடியா, ஆப்கானிஸ்தான் உட்பட ஆசிய நாடுகளில் 75,000 க்கு மேற்பட்ட சிறுவர்கள் யுத்த மோதல்களில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

# சோறா பாணா?

## பல்தேசியக் கம்பெனிதான் தீர்மானிக்கும்

விவசாய திணைக்களத்திற்குச் சொந்தமான நெல் நாற்றுப் பண்ணையை தனியார் மயமாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப் பண்ணையை சி.ஐ.சி (CIC) என்ற அமெரிக்க பல்தேசியக் கம்பெனிக்கு 1.2 மில்லியன் வருடக் குத்தகை அடிப்படையில் 50 வருடங்களுக்கு கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதிக விளைச்சலைக் கொடுக்கக் கூடிய ர்4 என்ற மிறாக்கின் விதை நெல் ஆராய்ச்சி மூலம் 1995 ல் முதல் முதலாகக் கண்டு பிடித்த பெருமை இலங்கைக் குத்தானுண்டு. இதற்கு ஒரு வருடத்திற்கு பிண்பு தான் பிலிப்பைன்ஸ்சிலுள்ள சர்வதேச நெல்லாராச்சி நிலையம் இதே மாதிரி ரக நெல்லைக் கண்டுபிடித்தது.

1998 ல் ஹிங்குறாக்கொடையிலுள்ள முதலாவது நெல் நாற்றுப் பண்ணை ஒரு பல்தேசியக் கம்பெனிக்கு 50 வருட குத்தகைக்கு கொடுக்கப்பட்டு விட்டது. இப்பொழுது பெல்வேஹெர நெல் நாற்றுப் பண்ணையும் அமெரிக்கப் பல்தேசியக் கம்பெனிக்கு தாரைவார்த்துக் கொடுக்கப் பட விருக்கின்றது.

அமெரிக்காவிலுள்ள பல்தேசியக் கம்பெனிகள் உலகில் குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளிலுள்ள விவசாய அபிவிருத்தியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு ஒரு பெரும் இயக்கத்தை நடத்தி வருகின்றன. இந்த நோக்கத்துடன் ஆசியா, தென் அமெரிக்கா, ஆபிரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள விவசாய நாற்றுப் பண்ணைகளை ''மொன்சன்றோ'' என்ற அமெரிக்க பல்தேசிய கம்பெனி தனது கைப்பிடிக்குள் கொண்டு வந்து விட்டது. இதனால் இந்த நாடுகளிலுள்ள விவசாயிகள் தமக்குத் தேவையான பயிர் செய்வதற்கான விதைகளைக் கூட இந்த பல்தேசிய கம்பெனியிடமிருந்துதான் கொள்வனவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பல்தேசியக் கம்பெனிகள் கோடிக்கணக்கான ரூபாய்களை இந்த நாடுகளிலிருந்து கொள்ளையடிக்கின்றன. அதேவேளை இந்த நாடுகளின் அபிவிருத்தி குன்றி வருகின்றது. உதாரணமாக தென் ஆசியாவில் நெல் களஞ்சியமாக விளங்கிய இந்தோனேசியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் இந்த பல்தேசியக் கம்பெனிகளின் கட்டுப்பாடுகளினாலும் தவறான ஆலோசனைகளினாலும் விவசாய அபிவிருத்தி நாசமாக்கப்பட்டு விட்டது. இதனால் இந்த நாடுகளிலுள்ள நெற் செய்கை பெரும் பாதிப்புக்குள்ளாகிவிட்டதுடன் பஞ்சநிலை ஏற்பட்டுள்ளது. 'இங்கு நெல் உற்பத்திக்கு அதிக செலவாகின்றது. ஆனால் கோதுமை உற்பத்திக்கு குறைந்த செலவாகின்றது. ஆகவே கோதுமை உற்பத்தியில் ஈடுபடுங்கள், என்று இந்த நாடுகளுக்கு பல்தேசியக் கம்பனிகள் ஆலோசனை கூறுகின்றன. எமது நாட்டிற்கும் இந்த பேராபத்து வர இருக்கின்றது. எமது விவசாயம் குறிப்பாக நெல் உற்பத்தி இந்த அமெரிக்க பல்தேசியக் கம்பனியின் பிடிக்குள் சிக்குண்டால் நிச்சயமாக எமது நெற்செய்கை பாழடிக்கப்படுவதுடன் எமது பாரம்பரிய உணவான சோற்றுக்குப் பதிலாக பாணைத்தான் சாப்பிடுங்கள் என்று எமக்கு இப்பல் தேசியக் கம்பனிகள் ஆணையிடும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

# கலை வெளிப்பாடும் நவீன ஓவியமும்

ஏ.கே.நடராசா.

ஓவியம் என்பது மனிதர் தமது எண்ணக் கருத்துக்களை வண்ணம், வடிவம், இரேகை ஆகியவற்றால் வெளிப்படுத்துதல் ஆகும். சித்திரமூலம் கருத்தை வெளிப்படு த்தும் போது தமது படைப்புக்களை நல்லவை, சரியானவை என வெளி உலகம் ஏற்றுக்கொள்ளுமா அல்லது எள்ளி நகையாடுமா என்பன போன்ற எண்ணம் ஒரு ஆரம்ப நிலையிலுள்ள சைத்திரிகனுக்கு ஏற்படுவது இயல்பு. வெளி உலகின் குறுக்கீடு பற்றிக் கவலைப்படா மல் வரையக்கூடிய மனப்பாங்கு பலருக்கு இருப்பதில்லை. ஆச்சரிய மென்னவென் றால் பாலர் பிள்ளைப் பருவத்துக் குழந்தைகளுக்குப் பிறர் சிரிப்பார்களே விமர்சிப்பார்களே என்ற எண்ணம் தடை செய்வதில்லை. ஆனால் இவர்கள் கூட வளரும் போது பின்னால் ஒருவன் நின்று தனது படைப்பைப் பார்த்துச் சிரிக்கின்றான் அல்லது சிரிக்கக்கூடும் என்று எண்ணு கிறார்கள். இந்த எண்ணம் வந்துவிட்டால் அவர்களுடைய தன்னம்பிக்கை குறைந்து விடுகின்றது. சுதந்திரமான வெளியீட்டுக்குத் தடை ஏற்பட்டு விடுகிறது. இத் தடையைத் தாண்டுகிற வல்லமை ஒருவனுக்கு ஏற்படுகின்ற போதுதான் அவனால் ஒரு ஓவியனாக முடிகிறது.

பிறருடைய சித்திரங்களைப் பார்த்து விமர்சிப்பவர்கள் ஒன்றைத் தம் மனதில் நன்றாக நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். விமர்சனம் செய்யக்கூடிய தகுதி தங்களுக்கு உண்டா இல்லையா என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அத்தகைய தகுதி தங்களுக்கு இல்லை யென்றால் இது எனக்கு நன்றாகப் பிடித் திருக்கிறது அல்லது எனக்கு அவ்வள வாகப் பிடிக்கவில்லை என்பதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். இது வெறும் அபிப்பிராயம் மட்டுமே. இது உண்மையாகி விடாது. இத்தகைய சாமானிய விமர்சகர் கள் நம்மிடையே உள. ஒரு கலைப் படைப்பைக் காண நேரும் ஒருவருக்கு அதைப்பற்றி ஏதாவது சொல்ல வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவது இயல்பு. அப்படித் தனது கருத்தைக் கூறும் உரிமை அவருக்கு உண்டு. ஆனால் அது தனது கருத்து மட்டுமே என்று கூறிவிட வேண்டும். ஒரு கலைப்படைப்பை விமர்சிக்கும் தகுதி அத்துறையில் நிறைய அனுபவம் பெற்றவ ருக்கே உரியதாகும். சித்திரம் என்றால் என்ன சிறுவர் சித்திரம் எப்படி இருக்கும். சிறுவனின் உடல் உள வளர்ச்சி எப்படிப் பட்டது. அவர்கள் தாங்கள் காணும் புற உலகை எப்படிச் சித்தரிக்கிறார்கள். அவர்களது அக உலகம் எப்படிப்பட்டது. உணர்ச்சிகளை அனுபவங்களை எவ்வாறு வெளியிடுகின்றார்கள், சித்திரம் வரைவதில் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை எவ்வாறு சமாளிக்கின்றார்கள். அவர்களது உள வியல் வெளிப்பாடுகள் ஆழ்மன எண்ண ங்கள் அவர்களது சித்திரங்கள் மூலம் எவ்வாறு புலப்படுத்தப்படுகின்றன என்பன போன்ற விடயங்கள் அவர்களது ஆயிரமா யிரம் படங்களை ஆய்வு செய்வதன் மூலமும் பெற்றுக் கொண்ட அனுபவமே ஒருவரைத் தகுதிவாய்ந்த விமரிசகனாக ஆக்குகிறது. சிறுவர் சித்திரங்களை மட்டுமல்ல வளர்ந்தவர்களுடைய சித்திரங் களைக் கூட விமர்சிப்பவர்கள் தாங்கள் ஓவியர்களாக இல்லாவிடினும் வளர்ச்சி பெற்றுள்ள வரலாறு ஓவியப் படைப்பாளி வாழும் நாடு, சமூக அரசியல் கலாச்சாரற

பின்னணி ஓவியனது தனிமனித இயல்பு ஆகிய இவைபற்றியெல்லாம் ஓரளவு அறிந்து கொண்டாலேயே அவர்களது விமர்சனம் பெறுமதி உள்ள ஒன்றாக அமையும். அடிப்படை ஓவியக் கோட்பாடுக ளையே அறியாதவர்கள் கூட சில சமயங் களில் ஓவியங்கள் பற்றி அடித்துக்கூறப் புறப்பட்டு விடுவதுண்டு. அவ்வகை விமர்சனம் ஆரோக்கியமான ஒன்றல்ல.

இலங்கையில் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஓவியர்கள் பலர் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, மலையகம், கொழும்பு ஆகிய இடங்களில் செயற்பட்டுக்கொண்டு தான் இருக்கிறார்கள். அனேகமானோர் தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து சேர்த்து வைத்த ஓவியங்கள் என்னவாயிற்று என்று தெரியாத நிலையில் வாழ்ந்து; கொண்டிருக்கின்றனர். இப்படிப் பட்ட சிக்கலான நிலையிலும் கொழும்பு வந்து சிறிய அளவாகிலும் காட்சிகள் வைத்துச் சென்றுள்ளனர். இக்காட்சிகளை வந்து பார்த்து படைப்பாளிகளை ஊக்கு விக்கும் ஆர்வலர்களின் எண்ணிக்கை போதியதாக இல்லை. பொதுவாக ஓவிய மென்றாலே தமக்கு அதுபற்றி ஒன்றும் தெரியாது என்று சொல்லும் புத்தி ஜீவிகள் இன்னும் நம்மத்தியில் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்டவர் கள் அருகிவருவதும் இத்துறையில் ஆர் வம் காட்டும் புத்திஜீவிகள் பெருகிவருவ தும் மகிழ்ச்சி தருவதாக இருக்கின்றது. எழுத்தாளர், இசைக்கலைஞர், கட்டடக் கலைஞர், புகைப்படக்கலைஞர், டாக்டர் கள், சட்ட அறிஞர் போன்ற பலர் ஒன்றுகூடி தம்முட் கலந்துரையாடிக் கலை வளர்ச்சி க்கு நல்ல ஊக்குவிப்பு வழங்குவதானது எதிர்காலத்தில் இத்துறை நல்ல வளர்ச்சி காணும் எனும் நம்பிக்கையை ஊட்டு கின்றது.

இச்சந்தர்ப்பத்தில் இலங்கைத் தமிழர் களின் ஓவிய வரலாறு எப்படி இருந்தது என்பது பற்றி சிறிது நோக்கலாம். யாழ்ப்பாணத்திலே ஓவியம் சமயத்தோடு ஒட்டிய ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. அவற்றுள்ளும் நூறு வருடங்களுக்கு முந்திய ஓவியங்கள் நல்ல நிலையில் இருப்பதாகத் தெரியவில்லை. ஓவியக் கல்லூரிகளில் பயின்று ஓவியம் தீட்டுபவர் கள் மிக அண்மைக்காலத்தவர்களே. இவர்களுட் பெரும்பாலோர் இயற்கையைப் பின்பற்றி ஓவியம் தீட்டுபவர்களே. எனவே இங்குள்ள மக்களும் இவ்வகை ஓவியங்க ளையே கண்டு இரசித்துப் பழகியுள்ளனர். நவீன பாணியில் ஓவியம் தீட்டுபவர்களும் உள்ளனர். இதன் காரணமாக மக்களின் ஆர்வம் நவீனச் சித்திரங்கள் பக்கம் திரும்பியுள்ளது. எனினும் இத்தகைய ஆர்வலர்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவானவர்களே. இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் தமிழர் ஓவியங்கள் ஏறக்குறைய இந்நிலையில்தான் இருக்கு மென ஊகிக்கலாம். வெளி உலகில் ஏற்ப டும் மாற்றங்கள் புதிய அணுகு முறைகள் சகல துறைகளிலும் அதன் பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும் ஓவியத்துறையும் இதற்கு விலக்கல்ல.

ஐரோப்பாவில் மறுமலர்ச்சிக் காலத் திற்குப் பின்னர் ஓவியத்துறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. இவற்றுள் மிக முக்கியமானது கனவடிவச் சித்திர அமைப்பு முறையாகும். புகைப்படக் கருவி மூலம் வர்ணப்படங்கள் எடுக்கக்கூடிய வசதி ஏற்பட்டதும் மிகுந்த சிரமம் எடுத்து இயற்கையைப் பின்பற்றி ஓவியம் தீட்டுவது அவசியமற்ற ஒன்றாகிவிட்டது. மறுமலர்ச்சி யின் காரணமாக சிந்தனைச் சுதந்திரம் வலுப்பெற்றது. கலைஞர்களின் படைப்பிலே பின்பற்றல் அல்லாத தனிமனித வெளிப் பாடுகள் வரவேற்பைப் பெற்றன. இத்தனி மனித சுதந்திரத்தின் வளர்ச்சியே ஓவியத் துறையிலும் நவீன பாணிகள் உண்டாவ தற்கு வழிவகுத்தன. அவற்றுள் முக்கிய மான ஒன்று கனவடிவச் சித்திரமுறையா கும். இம்முறையின்படி ஒரு தளத்தில் நின்று கண்ட ஒரு தோற்றத்தினை வரை வதற்குப் பதிலாக பல்வேறு தளங்களில் நின்று கண்ட அதே பொருளின் தோற்றங் களை உள்மனதில் ஒருங்கிணைத்து இசைவுபட்ட ஒரு கூட்டமைப்பாக்கி ஓவிய மாக தீட்டினர். இவ்வகை ஓவியர்களின் பார்வை ஊடறுத்துச் செல்லும் திறனுடைய

தாக அமைந்ததனால் ஒரு தளத்தில் நின்றே சகல தளத்துப் பார்வைகளையும் அகக்கண்ணால் காணும் வல்லமையை பெற்றது. காட்சி அனுபவங்கள் தோற்றங் கள் உள்மனதில் உருகிப் பொருத்தமுற இணையப் பெற்றன. காட்சிப் பொருளில் கண்ணுற்ற நிறங்கள் படைப்பாளியின் மன இயல்புக்கேற்ப விடயத்தின் தன்மைக்கேற்ப மாறுபாடடைந்தன. உதாரணமாக நீலப் பெண், பச்சைமாடு போன்ற இயற்கைக்கு மாறான நிறங்களைப் பெற்றன. தமது காட்சிகளில் படிமங்களைக்கூட கையாண் டுள்ளனர். தற்கால யுத்தத்தின் கொடுமை பற்றி விளக்க வந்த காட்சியொன்றில் சண்டையிடும் மாட்டின் தலை, வேதனையு றும் குதிரையொன்றின் தலை ஆகியன சேர்க்கப்பட்டுள்ளன. இவை காட்சியுடன் நேரடித்தொடர்பு உடையனவே. கனவடிவச் சித்திர அமைப்பு இயற்கையை ஒரு புதிய கோணத்தில் புதிய சிந்தனையுடன் பார்க்கவும் காலங்காலமாகக் கையாளப் பட்டுவந்த சித்திர அமைப்பு முறையிலி ருந்து வேறுபடும் துணிவை இவ்வகை ஓவியர்களுக்கு அளித்தது. நவீன ஓவியம் இந்தக் கனவடிவ வெளிப்பாட்டு முறையை மட்டுமே கைக்கொள்ளவில்லை. அது பல்வேறு வகைகளில் விரிந்து வெவ்வேறு வடிவங்களை எடுத்தது. நவீன சித்திரத்தில் பெரும்பகுதி படைப்பாளி காண்கின்ற காட்சி யின் தோற்றத்தைவிட அவரது அனுபவமி குந்த கருத்து வடிவங்களையும் இணை த்தே வெளிவருகின்றது. இக்கருத்து வடிவ ங்கள் பின்னர் ஆழ்மன இயல்புகளுடன் இணைந்த அகக்காட்சிகளாகி புதுமையான தோற்றங்களுடன் வெளிப்படுத்தப்படுகின் றன. உதாரணமாக மரக்கிளை ஒன்றிலு ள்ள மணிக்கூடொன்று மெழுகினாலானது போன்று சூட்டில் இளகி இரு பக்கமும் தொங்குகின்றது. இவ்வகைச் சித்திரங்கள் அடிமன நவிற்சிச் சித்திரங்கள் என அழைக் கப்படுகின்றன. இவை எந்த அளவுக்கு ஓவியம் என்ற வகையில் முக்கியமானவை என எம்மால் அறுதியிட்டுக் கூற முடியாது இருப்பினும் பார்வையாளரின் உள்ளங் களை ஈர்ப்பனவாகவும் அவற்றுடன் ஒன்றுபடுபவையாகவும் இருப்பது அதிசயிக் கத்தக்கது. இந்த ஒன்றுபடுதல், அதிசயிக்க வைத்தல், இசைவேற்படுத்துதல், இதந்தரு தல், மனத்திருப்தி அளித்தல் என்பன ஓவியம் தரும் பயன்பாடுகளில் முக்கிய மானவை ஆகும்.

வேகமாக இயங்கும் மாற்றமுறும் இன்றைய உலகத்திலே ஓவியத்திலும் வேகம் புகுந்துள்ளது. இந்த வேகத்துக்கு ஏற்றதாகத்தான் காட்சிப் பொருளில் தெரிவு செய்தலும் நீக்குதலும் இடம் பெற்று எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. இலக்கியத் தில் சொற்செட்டு என்பது போல ஓவியத் திலும் சாராம்சம் இடம் பெறுகின்றது.

இவ்வேகம் இன்னும் ஒருபடி மேலே போய் ஓவிய அமைப்பு முறையில் அசை வினை ஏற்படுத்தும் உத்தியைக் கையாள வைக்கிறது. ஒழுகுகின்ற வர்ணத்தை அசைத்தசைத்துப் பிரயோகிப்பதன் மூலம் ஒருவித அசைவினைப் பார்ப்போர் உள்ளத்தில் ஏற்படுத்துகிறது.

படிகளில் இறங்கிவரும் நிர்வாணப் பெண் என்ற ஓவியத்தில் ஒரு பெண்ணின் பல தோற்றங்கள் மேற்படியிலிருந்து கீழ்ப்படிவரையில் இறங்குகின்ற பாவனை யில் மிக நெருக்கமாக அடுக்கடுக்காக அசைவு காட்டும் நிலையில் வரையப்பட்டு ள்ளன. ஓவியத்திலுள்ள பெண் ஓடி இறங் காவிடினும் பார்ப்போர் உள்ளம் பெண் இறங்கி வருவது போல உணர்கிறது.

நவீன ஓவியத்தின் வளர்ச்சி எத்திசை யில் போகின்றதென்பதை எதிர்வு கூற முடியாதுள்ளது. காலம்தான் இதற்கான பதிலைக் கூறும்.

ஓவியன் உரு அமைத்தல் மூலம் தன்னையே பெருமளவில் வெளிப்படுத்துகி றான். கலை மனிதனது ஆன்மீகப் பார்வை யின் அளவுகோல். கலை வெளிப்பாடானது ஒரு மனிதனின் சுயம், வாழ்ந்த காலம், சூழல் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும். கலை ஓவியனின் உள்ளுணர்வால் பெறப்பட்ட ஒரு உயர்ந்த கட்டமைப்பான இசைவுத் தோற்றம். கலைகள் உலகின் அதி உன்னதமான அழிவுறாத பெறுமதி கள் கொண்டவை.



# எழுத்துச் சுதந்திரம்

ஹாவர்ட் ஃபாஸ்ட்

1951 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஸ்பார்ட்டகஸ் நாவலை எழுதி முடித்தேன். ஒரு முறைக்கு இருமுறை தேவையான திருத்தங்கள் செய்தேன். பின்னர் லிட்டில் பிரவுண் (Little Brown) பதிப்பகத்தைச் சேர்ந்த ஆங்குஸ் கேமரூனுக்கு கையெழுத்துப் பிரதியை அனுப்பி வைத்தேன். அவர்கள் ஏற்கனவே என்னுடைய இரண்டு நாவல்களை வெளியிட்டுள்ளனர். ஸ்பார்ட்டகஸ் கையெழுத்தப் பிரதியை பார்த்து முடித்தபின் ஆங்குஸ் எனக்கு விரிவான கடிதம் ஒன்றை எழுதினார். அதில் நாவலை வெகுவாகப் பாராட்டியிருந்தார். உன்னுடைய மிகச் சிறந்த புத்தகம் இது என்றும், கதை சொல்லிய விதம் அற்புதமானது என்றெல்லாம் சிலாகித்திருந்தார்.

கம்யூனிச எதிர்ப்பும் மெர்க்கார்த்திசமும் உச்சநிலையில் இருந்த காலகட்டம் அது. அந்தக் கடிதம் எனக்கு புதிய தெம்பை ஊட்டியது. ஆங்குஸ் ஒரு கம்யூனிஸ்ட் இல்லை. ஆனாலும் அமரிக்கனுக்கே உரிய மதிப்பீடுகள் அவரிடம் ஆழமாக இருந்தன. அக்கடிதத்தினால் உண்டான மகிழ்ச்சியை நானும் என் மனைவி பெட்டியும் கொண்டாடினோம். ஆனால், ஒரு சில வாரங்களுக்குள் ஆங்குஸ் அந்த நம்ப முடியாத செய்தியை நியூயார்க்குக்கே வந்து என்னிடம் சொன்னார். அவரின் பதிப்பகத்தில் என்னுடைய நாவலை வெளியிட இயலாது என்றார். காரணம், ஜே. எட்கர் கூவர் என்னுடைய எந்த புத்தகத்தை வெளியிட்டாலும் பதிப்பகத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்படும். என்று மிரட்டி இருந்ததுதான். ஸ்பார்ட்டகஸை வெளியிடவில்லையெனில், தான் பதவியிலிருந்து விலகுவதாக பதிப்பகத்தை மிரட்டினார் ஆங்குஸ். ஆனால் பார்ட்டகஸை அவர்கள் வெளியிட முன்வரவில்லை. ஆகவே ஆங்குஸ் தன் பதவியைத் துறந்தார். சாதாரண சூழ்நிலையில் இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாக இருந்திருக்கும். ஆனால், அந்த நேரத்தில் எந்த பெரிய முக்கிய பத்திரிகையும் இது பற்றி குறிப்பிடவில்லை 'தி டெய்லி ஒர்க்கர்' மட்டும் எழுதியது.

பின்னர், பிரதியை 'வைக்கிங் பிரஸ்' ஸ்கிப்னர், ஹார்ப்பர் போன்ற பதிப்பகங்களுக்கு அனுப்பினேன். யாருமே வெளியிட தயாராக இல்லை. அப்பொழுது உலகம் முழுவதும் படிக்கப்பட்ட பிரபல எழுத்தாளர் நான். 82 மொழிகளில் என் புத்தகங்கள் மொழி பெயர்க்கப்பட்டிருந்தன. இது குறித்து தீவிரமாக யோசித்தேன். ஹிட்லரை எதிர்க்க முடியாத ஜெர்மனிய மக்களை புரிந்துகொள்ள முடிந்தது. ஹிட்லரிடமாவது கொலைப்படையும், கான்ஸ்ட்ரன்டேஷன் முகாம்களும் இருந்தன. இங்கு இருந்ததோ ஜே. எக்டர் கூகர், எஃப்.பி.ஐ (F.B.I) மிரட்டல் மட்டுமே. தைரியம் மிகுந்த புத்தக வெளியீட்டாளர்கள் யாருமே இல்லாமல் போனார்கள்.

இறுதியாக, டபுள் டே (Double Day) பதிப்பகத்திற்கு ஸ்பார்ட்டகஸ் பிரதியை அனுப்பினேன். அப்போதுதான் அந்த வித்தியாசமான நிகழ்ச்சி நடந்தது. ஜார்ஜ் ஹெக்ட் என்ற நபர் தொலைபேசியில் பேசினார். அவர் 'டபுள் டே' புத்தகக் கடைகளின் தலைவராக இருந்தார். அவர் கூறினார், ''எங்கள் புத்தக ஆசிரியர் குழுக் கூட்டம் இரண்டு மணி நேரம் நடந்தது. முதல் ஒரு மணி நேரம் உங்கள் புத்தகத்தை வானளாவ புகழ்ந்தார்கள். அடுத்த ஒரு மணி நேரம் உங்கள் புத்தகத்தை ஏன் வெளியிட முடியாது என்பது பற்றி பேசினார்கள். அந்தக் கோழைகள் எப்படியாவது போகட்டும் நான் புத்தகத்

தைப் படித்தேன். நான் சொல்வதெல்லாம் இதுதான், புத்தகத்தை நீங்களே வெளியிடுங்கள். இத்தருணமே புத்தகக் கடைகளுக்காக 600 பிரதிகளுக்கு ஆர்டர் தருகிறேன்."

அப்போது 600 பிரதிகளுக்கு ஆர்டர் மட்டுமே இருந்தது. என் வருமானம் என் வாழ்க்கைக்கும் குடும்பத்துக்கும் போதுமானதாய் இருந்தது. பதிப்பகம் தொடங்க முதலீடு செய்யமுடியாத நிலை. தன் புத்தகங்களை வெளியிட தானே பதிப்பாளராய் மாறியதால் மார்க்ட்யொனுக்கு ஏற்பட்ட அவல நிலையை சில நண்பர்கள் நினைவூட்டினார்கள். அதற்கு மேல் வேறு எந்த பயந்தாங்கொள்ளி வெளியீட்டாளர்களுக்கும் என் புத்தகத்தை அனுப்பப் போவதில்லை என்று முடிவு செய்தேன். பிரிட்டனில் இரு பதிப்பாளர்கள் அதை வெளியிட முன்வந்தார்கள். ஆனால், இங்கிலாந்தில் என் புத்தகம் முதலில் வெளிவந்தால் அது என்னுடைய சரணாகதியாய் இருக்கும் என்பதால் அதை நான் விரும்பவில்லை. அப்போது என் மனைவியின் உறுதியும் ஒத்துழைப்பும் என்னை பல நேரங்களில் ஆச்சரியப்பட வைத்தது.

இறுதியாக, நிலைமையை விளக்கி ஒரு சிலருக்கு கடிதம் எழுதினேன். புத்தகத்திற்கான தொகையை முன்பணமாக அனுப்பமுடியுமா? என்று கேட்டிருந்தேன். என் வீட்டின் கீழ்பகுதி பதிப்பகத்திற்கான இடமாய் மாறியது. நானும் பெட்டியும் நண்பர்களுமே எல்லா வேலைகளையும் செய்தோம். யாருமே தங்கள் வேலைகளுக்காக பணம் வாங்கிக் கொள்ளவில்லை. படிப்படியாக ஆர்டர்கள் வந்தன. சாதாரண பதிப்பு மூன்று டாலர் என்றும், கையெழுத்திட்ட விசே' பதிப்பு ஐந்து டாலர் என்றும் விலை நிர்ணயித்தோம். இறுதியில் புத்தகம் வெளியானது. 'டபுள் டே' பதிப்பகத்திற்கு 600 பிரதிகள் அனுப்பினோம். அதற்கான பணம் உடனடியாக வந்தது. மோரிஸ் சோர்க்கின் (Moris Sorkin) பிலிப் ∴போனர் (Philip Foner) என்ற வரலாற்று ஆசிரியர்கள் இடதுசாரிப் பதிப்பகம் ஒன்றை வைத்திருந்தார்கள். அவர்கள் நிச்சயம் என் புத்தகத்தை வெளியிட்டிருப்பார்கள். ஆனால் எனக்கு திமிர் அதிகம். என் புத்தகத்தை பெரிய பதிப்பகங்கள்தான் வெளியிட வேண்டும் என்றிருந்தேன். அந்த இடதுசாரி வெளியீட்டாளர்கள் ஸ்பார்ட்டகஸை நான் விரும்பினால், தாங்கள் விற்றுத்தருவதாக கூறினார்கள்.

ஸ்பார்ட்டகஸ் புத்தக விற்பனை அமோகமாக இருந்தது. மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். வாடகை கொடுத்து பதிப்பகத்திற்கான புதிய அலுவலகம் எடுத்தோம். 'எ நியுயார்க் டைம்ஸ் புக் ரெவ்யு' பத்திரிகையில் முழுபக்க விளம்பரம் கொடுக்க, விளம்பர நிறுவனங்களை அணுகினோம். ஆனால் விளம்பரத்தை வெளியிடக்கூட அவர்கள் பயந்தனர். பின்னர் நானே 'டைம்ஸ்' பத்திரிகைக்குச் சென்றேன். விளம்பரங்களுக்குக்கூட அப்போது தணிக்கை இருந்தது. அதிகாரி, நான் கொண்டுசென்ற விளம்பரத்தைக் கவனமாகப் பார்த்தார். ''பயங்கரம் என்று இதில் ஏதும் இல்லை. ஆனால், புத்தகத்தில் அரசாங்கத்திற்கு எதிராக ஏதும் உள்ளதா?'' என்று கேட்டார். நான் சொன்னேன் ''இந்த அரசாங்கத்திற்கு எதிராக இல்லை. ஆனால், புராதன ரோமானிய அரசுக்கு எதிராக உள்ளது.''

ஒரு ஞாயிற்றுக்கிழமை விளம்பரம் வந்தது. அதற்கான செலவு 5000 டாலர். இதனால் என் வங்கிக் கணக்கில் ஒன்றும் இல்லாமல் போய்விட்டது. ஆனால், ஸ்பார்ட்டகஸ் தொடர்ந்து விற்பனையாகிக் கொண்டிருந்தது. முதல் பதிப்பில் 5000 பிரதிகள் பின்னர் இரண்டு, மூன்று, நான்கு பதிப்புகளில் மொத்தம் 50,000 பிரதிகள் வெளிவந்தன. இதில் 48,000 பிரதிகள் மூன்றே மாதங்களில் விற்றன. இடதுசாரிப் பதிப்பாளர்களின் மூலமும் நேரடி தபால் ஆர்டர் மூலமும் விற்றோம். வந்த லாபங்களை மேலும் விளம்பரங்களுக்காக செலவு செய்தேன். ஆயினும் இறுதியில் 2000 டாலர் மீதமிருந்தது. ஆனால், எனக்கென்று இந்த புத்தகத்திற்காக எந்த தொகையும் எடுத்துக் கொள்ளவில்லை.

பத்தாண்டுகளுக்கு பிறகு கிரிக்டக்லஸ், ஸ்பார்ட்டகஸை திரைப்படமாக எடுத்தார். அதன் பின்னர் பல நாடுகளில் ஸ்பார்ட்டகஸ் பல லட்சம் பிரதிகள் விற்பனையானது வேறு வி'யம்.

'BEING RED' என்ற நூலிலிருந்து
தமிழாக்கம் - எம். சிவகுமார்.

# மாவட்ட கலாசார நிலையங்கள்

பூரண அபிவிருத்தியின் அத்தியாவசிய மான ஓர் அம்சமாக கலாசாரத்தின் முக்கி யத்துவத்தை அங்கீகரித்து " கலைகளின் சுயாதீனத்தைக் கௌரவித்து, கலைகள மீது மறைமுகமாக அரசு தலையீடு செய்வதை இல்லாதொழிக்கும் அதே வேளை, கலைகளுக்கு குறிப்பிடத்தக்க அனுசரணை வழங்கப்படும்" என அன்றிரு ந்த மக்கள் முன்னணி அரசாங்கத்தின் 1994 தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் அன்றிருந்த மக்கள் முன்னணி அரசாங்கம் மாவட்ட கலாசார நிலையங்களை அமை க்க உத்தேசித்தது. இந்த நிலையங்களை அமைக்க 26 பேர் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டு பொறுப்பு கொடுக்கப்பட்டது. ஆனால் இக்குழுவின் செயல்பாடு என்ன என்று இதுகாலவரை தெரியவில்லை. இக்குழுவிற்கு என்ன நடந்ததென்று தெரியவில்லை.

மாவட்ட கலாசார நிலையங்கள் சுயாதீனமானவையாக இருக்க வேண்டும். அரசு இச்சபைகள் இயங்குவதற்கு போதியளவு நிதி வழங்கவேண்டும் என்று கொள்கையளவில் அரசால் ஒப்புக்கொள் ளப்பட்டது. இக் கலாசார சபைகளை அமைப்பதற்கு உகந்த ஒரு தேசிய கலாசார கொள்கை உருவாக்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில்தான் இச்சபைகள் அமைக்கப்படவேண்டும். ஆனால் நடந்தது என்ன?

நீண்ட கால இடைவெளியின் பின் முன்னைய மக்கள் முன்னணி அரசாங்கம் திடீரென கலாசார சம்பந்தமாக 4 சட்ட வரைவுகளைக் கொண்டுவந்து சட்டமாக்க முயற்சிகளை மேற்கொண்டது. இச்சட்ட வரைவுகள் மூலம் கலாசார அமைச்சுக்கும் கலாசார அமைச்சின் உயர் அதிகாரிகளு க்கும் எல்லையற்ற அதிகாரங்கள் குவிக்கப்படவிருந்தன. அதே வேளை கலைஞர்களினதும் எழுத்தாளர்களினதும் பங்களிப்புப் புறக்கணிக்கப்பட்டிருந்தது. இச்சட்ட வரைவுகள் தயாரிக்கப்படும் பொழுது எந்தவொரு கலைஞனோ, எழுத்தாளனோ பங்கு கொள்ளவில்லை: அவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட வில்லை. கலாசார அம்சத்தின் உயர் அதிகாரிகள்தான் இந்த 4 சட்ட வரைவுக ளைத் தயாரித்தவர்கள். ஆனால் எமது நாட்டிலுள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் முன்னணி கலைஞர்களினதும் எழுத்தாளர் களினதும் ஒருமுகப்படுத்தப்பட்ட கடும் எதிர்ப்பினால் இந்த 4 சட்ட வரைவுகளை சட்டமாக்கும் முயற்சி கலாசார அமைச்சரால் வாபஸ் பெறப்பட்டது.

சிறிது கால மௌன இடைவெளிக்குப் பின்னர் மாவட்ட ரீதியில் கலாசார நிலையங்களை கலாசார திணைக்களம் அமைக்க முற்பட்டது. இந்த நிலையங் களை அமைக்கும் தீர்மானம் ஜனாதிபதி யால் பிரகடனப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு கலாசார நிலையத்தையும் அமைப்பதற்கு ஜனாதிபதி நிதியிலிருந்து 20 லட்சம் ரூபாவை வழங்குவதற்கு ஜனாதிபதி முன்வந்தார். அத்துடன் நாடு பரந்த ரீதியில் 250 கலாசார நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று ஜனாதிபதி பிரகடனப்படுத் தினார். இதையடுத்து கலாசார திணைக்களம் மாவட்ட கலாசார நிலையங்களை அமைக்க ஆரம்பித்தது.

இற்றைவரை 50 கலாசார நிலையங் கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நிலை

யங்களுக்கான எந்தவித முகாமைத்துவ அமைப்பு முறையுமில்லாமல், சகல தீர்மானங்களும் கொழும்பிலுள்ள கலாசார திணைக்களத்தினால்தான் எடுக்கப்பட்டுள் ளது. இந்த நிலையங்கள் அமைக்கப்படும் பொழுது அந்தற்த பிரதேசத்திலுள்ள கலைஞர்களது ஆலோசனைகளோ, பங்களிப்புகளோ பெறப்படவில்லை. இந்த சபைகளை அமைப்பதற்கான நோக்கம் அரசியல் லாபத்தை அடிப்படையாகத் தானிருக்கின்றது.

கலாசார நிலையங்களை அமைப்பத ற்கு, ஏற்கனவே அரசினால் மூடப்பட்ட சில பாடசாலைக் கட்டடங்கள் அல்லது அரசி ற்குச் சொந்தமான பழைய கட்டடங்களை எடுத்து புனரமைப்பதற்கு முடிவெடுக்கப்பட் டுள்ளது. தொலைதூரங்களிலுள்ள இந்த நிலையங்களுக்கு மக்கள் எளிதில் செல் வதும் சாத்தியமற்றது. இந்த நிலையங் களை கலாசாரத் திணைக்களம்தான் அமைத்துள்ளது. இந்த நிலையங்களுக்கு எந்தெந்த வகையான கருவிகள், வாத்திய உபகரணங்கள் பொருத்தமானவை என்பது அந்தந்த பிரதேசங்களிலுள்ள கலைஞர்க ளுக்குத்தான் தெரியும். இக்கலைஞர்களு டைய எதுவித ஆலோசனைகளும்பெறப் படாமல் கலாசாரத் திணைக்களம் எதேச்சையான முடிவுகளை எடுத்துள்ளது. சாதாரணமாக ஒவ்வொரு கலாசார நிலையத்திற்கும் ஒரு 16 மி.மீ படம் காட்டும் 'புரொஜெக்டரும்' ஒரு பியானோ வாத்தியக் கருவியும் வழங்கப்பட்டிருக்கின் றது. இந்த படம்.காட்டும் புரொஜெக்டரை இயக்குவதற்குப் போதிய அனுபவமுடைய இயக்குனரும், போதிய படங்களுமின்றி இக்கருவியை எப்படிப் பயன்படுத்த முடியும்? கிராமப்புறங்களிலுள்ள இந்த நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் பியானோ வாத்தியக்கருவியை கையாள் வது சிரமமானது. இதற்குப் போதிய பயிற்சி தேவை. இக்கருவி அதிக விலையுடையது. சிக்கல் நிறைந்த வாத்தியக்கருவி இது. நகரப்புறங்களில் ஒரு சில இடங்களில்தான் இது பாவனையிலுள்ளது.

ஒவ்வொரு கலாசார நிலையத்தையும் நிர்வகிப்பதற்கு ஒரு கலாசார உத்தியோ கத்தரை கலாசார திணைக்களம் நியமித்து ள்ளது. இந்த உத்தியோகத்தர் எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது எவருக்கும் தெரியாது. இவருக்கு எதுவித பயிற்சியுமே வழங்கப்படவில்லை. இவரால் இந்த நிலையத்தை தனியே எப்படி நிர்வகிக்க முடியும்? இவருக்கு மாதச் சம்பளம் ரூபா 4000. அதே வேளை வாரத்தில் 7 நாட்களும் இவர் கடமை புரிய வேண்டும். இது சாத்தியப்படுமா?

இந்த மாவட்ட கலாசார நிலையங் களை இயக்குவதற்கு எந்தவிதமான தேசிய கலாசார கொள்கையும் வகுக்கப் படவில்லை. இந்த நிலையங்களில் இணைந்து செயலாற்றுவதற்கு அந்தந்தப் பிராந்தியங்களிலுள்ள கலைஞர்களுக்கு எதுவித வாய்ப்புக்களோ சந்தர்ப்பங்களோ வழங்கப்படவில்லை. இது முற்றுமுழுதாக அரசியல் நோக்கம் கொண்டது. அந்தந்தப் பிரதேசத்திலுள்ள அரசியல்வாதிகளும், அரசாங்க அதிகாரிகளும் ஆதிக்கம் செலுத்துவதற்கும், இந்த நிலையங்களை இரசியல் லாபங்களுக்காகவும் பயன்படுத் துவதற்காகவே நிறுவப்பட்டுள்ளன என்ப தில் எதுவித ஐயமுமில்லை. எமது கலை, கலாசார வளர்ச்சிக்கு இந்த மாவட்ட கலாசார நிலையங்கள் எவ்விதத்திலும் என்றும் பயன்படப்போவதில்லை. இதற்கா கப் பயன்படுத்தப்படுகின்ற ஜனாதிபதி நிதி கடலில் கரைத்த உப்புத்தான்.

> 'புத்திசாலித் தனங்களை ஒதுக்கிவிட்டு கோமாளித்தனங்கள் மூலம் வருவாயைப் பெருக்கும் உத்திகளைப் பின்பற்றுவது தமிழ்த் திரையுலகம், நவீன அறிவியலின் நுட்பமான கண்டுபிடிப்புகளை யும் களிப்பூட்டும் அம்சங்க ளுக்கும் மட்டுமே பயன் படுத்தப்படும் தொழில் நுட்ப வல்லுனர்கள் நிரம்பி யது. தமிழ்க்கனவுத் தொழிற்சாலை, தமிழ் மொழியி லேயே பயன் பாட்டு விதிகளை சுலபமாக ஒதுக்கி விட்டு தமிழ்ப் பாடல் தரும் வார்த்தையடிகளின் அசைவுகளால் உண்டாகும் பிம்பக் குவியல் களாலும் தமிழர்களின் அன்றாட வாழ்வின் மனப்பிராந்தியம் நிரப்பப்பட்டிருக்கின்றது.
>
> (சு. இராமசாமி)



# ஒரு கவிஞனின் இதயத்தாகம்

பசுபதி! - 'யாழ்ப்பாணக் கவிராயர்' என்னும் ஒரு சாதாரண புனைபெயருக்கு ள்ளே தன்னை மறைத்துக் கொண்டு, அசா தாரணமான வேகம் கொண்ட கவிதை களைப் படைத்த ஒரு கவிஞர்! தம்மை ஒரு கவிஞர் என்று விளம்பரப்படுத்திக் கொள்ளாமல், தன்னடக்கத்துடனிருந்து, சமூகக் கேடுகளுக்கு எதிராகப் போர்க்குரல் எழுப்பிய ஒரு கவிஞர்!

''உலகினைப் புதுக்கி, மூசி
உழைப்பவர்க்கு உடைமையாக்கி
அலகிலாப் பொதுமை வையம்
அமைத்து, இன வேதச் சாதி
அலகைகள் அனைத்தும் மாய்த்து, இங்கு
அறத்தினை அழகை ஓம்பப்
பலசுவைப் பாக்கள் யாத்து
படைத்துள்ள...'' கவிஞர்!

பசுபதி என்னும் இந்தக் கவிஞர் இந்த நாட்டிலே முப்பத்தைந்து ஆண்டுகளின் முன் வாழ்ந்தார்.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி இலங்கைச் சமுதாயத்திலே இடதுசாரி இயக்கச் சிந்தனைகள் எழுச்சி பெற்றிருந்த காலம்: தொழிலாளர் வர்க்கம் தலை நிமிர்த்தி நின்ற காலம்: ஒடுக்கப்பட்ட மக்கள் வடபுலத்து மண்ணிலே சாதியத்து க்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த காலம். இத்தகைய ஒரு விழிப்பு நிலைச் சூழலிலே அந்தச் சமுதாய எழுச்சிக்கு வலுவூட்டும் சக்தியாக நின்று கவிதை படைத்தவர் பசுபதி. அவருடைய சிந்தனையானது மொழி, இனம், சாதியம், சமத்துவ சமுதா யம் என வாழ்வின் கூறு ஒவ்வொன்றிலும் புதிய ஒளியைப் பாய்ச்சியது. காண்பவர் பார்வையைக் கூர்மையாக்கியது. நமது சமுதாயத்தின் அலங்கோலங்களையும் அவலங்களையும் அம்பலமாக்கியது. ஒழிய வேண்டியது எது, ஓங்க வேண்டியது எது என உணர்த்தி நின்றது. ஒரு புது உலகம் படைத்தல் வேண்டும் என்னும் ஆர்வத்தை மக்களது மனத்திலே விதைத்துச் சென்றது.

கவிஞர் பசுபதி, இந்த நாட்டு மக்களி டையே காணப்படும் வாழ்வு நிலைப் பேதங்களுக்கு எல்லாம் மூலகாரணமாக இருப்பது பொருளாதாரச் சமன் இன்மையே என அறிவுபூர்வமாக உணர்ந்திருந்தார். இந்தச் சமனின்மைக்கு மருந்து பொதுவு டைமைத் தத்துவமே என்ற தெளிவு அவருக்கு உண்டாக, பொதுவுடைமைக் கருத்துக்களைத் தமது கவிதைகளிலே நிறைத்து மக்களிடையே பரப்பினார்.

''பேணுகின்ற பொருளெல்லாம் தனியு டைமை ஆகா: பொதுவுடைமை: பொது மக் கள் சொத்தே ஆகும்'' என்று தனியுடை மைச் சமுதாயத்துக்கு அடித்துச் சொன் னார். தோன்ற வேண்டிய புது உலகிலே, '' சாதியென்னும் கொடுமையோ சற்றும் இல்லை! அங்கே சாத்திரங்கள் மோத்திரங் கள் பார்ப்பதில்லை!'' என்று குதூகலித்தார். ''ஈ என்று இரப்பவர்கள் எவரும் அங்கி ல்லை: இரந்துண்ணும் இழிநிலைதான் இருப்பதென்பது இல்லை'' என்று நம்பி க்கை ஊட்டினார். ''ஊண் உண்டு: உடை யுண்டு: உறங்குதற்கு மிக்க உப்பரிகை எல்லார்க்கும் உண்டு!'' என பொதுவு டைமை வாழ்வின் இலக்கு இதுதான் என்பதைத் தொட்டுக் காட்டினார், கவிஞர் பசுபதி.

கவிஞர் பசுபதி 1956 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி யில் அங்கத்தவராகச் சேர்ந்து இதயபூர்வ மாக உழைத்தவர். கம்யூனிஸ்ட் கட்சியில் பசுபதி கொண்டிருந்த ஈடுபாடு பற்றி தோழர் மு.கார்த்திகேசன் பின்வருமாறு சொல்லுகி

றார்: ''பசுபதி இதயபூர்வமாக இந்த இயக்கத்தில் ஈடுபட்டார். அவரது இதயத்தினின்றும் தோற்றமெடுத்த கவிதைகளே அவ்வியக்கத்துக்குக் காணிக்கையாகின!"

இலங்கையிலே - குறிப்பாக வடபுலத்து மண்ணிலே - சாதியம் என்னும் பேய் அன்றும் இன்றும் ஆட்டம் போடுகிறது. இந்த அனாகரிகத்தை , மனிதனை 'மனிதனாக' மதிக்கத் தெரியாத கூட்டம் ஒன்று, தங்களுக்கு உரிய ஒரு தனிப் பெருமை என்று இன்றும் எண்ணிக் கொண்டிருக்கின்றது. இப்படியான சூழலில் சாதியம் என்னும் பெயரால் ஒடுக்கப்பட்டவன் எவ்வாறு செத்துக் கொண்டிருக்கிறான் என்பதை பசுபதியின் கவிதைகள் உணர்வுக் கோலங்களாக நமக்குத் தருகின்றன.

''அவன் தீது: இவன் அடிமை: தீண்டாச் சாதி ஆயிரமாய் வாழ்வதிலே பெருமை கண்டார்'' என்னும் நையாண்டியும், ''நின்றொருவன் சன தரையில் பேசுகின்ற போது நீ வேறு நான் வேறு நினைப்பதுவோ வாது" என்ற நியாயமும், ''சேரும் பொருள் வளத்தால் செல்வம் சேர்ந்துவிட்டால் சாரும் பொதுவுடைமை: சாதிமுறை ஒழியும்'' என்னும் நம்பிக்கையும் சாதியம் பற்றிய இவரது பன்முகப் பார்வையின் சில வெளிப்பாடுகள். கவிஞர் பசுபதி சமூக விழிப்புக்காகவும் எழுச்சிக்காகவும் கவிதை படைப்பதோடு மாத்திரம் நின்றுவிட்டவர் அல்லர். அவர் அந்தக் களத்தில் இறங்கி உழைத்தவர். ''நிலப் பிரபுத்துவத்தின் சாபக்கேடான சமூகக் கொடுமைகளுக்கும், முதலாளித்துவச் சுரண்டலுக்கும் உட்பட்டு, சமூகத்தின் அடித்தளத்தில் கிடந்து உழன்று கொலண்டிருக்கும் மக்களின் முன்னேற்றத்திற்கும் நல்வாழ்விற்குமாகத் தன் இளம்பராயம் தொடக்கம் உழைத்து வந்தவர் பசுபதி அவர்கள்" என்று எம்.சி. சுப்பிரமணியம் கவிஞரது சமூகப் பணியைப் பாராட்டியிருக்கிறார்.

கவிஞர் பசுபதி, 1962ஆம் ஆண்டு யாழ் நகரிலே நடைபெற்ற சோமசுந்தரப் புலவர் விழாக் கவியரங்கிலே, கவிதை பாடினார். அந்தக் கவிதையிலே பசுபதியின் பரந்த நோக்கும், உரிமை வேட்கையும் நன்கு வெளிப்பட்டு நிற்கின்றன. அவர் அங்கே சோமசுந்தரப் புலவரது கவித்துவத்தைப் போற்றுகிறார். அதே வேளை, சாதி, மொழிச் சண்டைகளின் இழிவைக் கூறி, வீழும் மனிதனுக்கு வாழும் வழி காட்டல் வேண்டும் என்பதையும் வற்புறுத்திச் சொல்கிறார்.

பசுபதி சமுதாயத்தில் நிலவிய மடைமையைச் சாடினார். மனிதனைச் சாடவில்லை. தமது கவிதைகள் மூலம் ஆக்கத்திற்கு ஊக்கம் தந்தார். அழிவுக்கு வழி காட்டவில்லை. அன்றைய சாதியத்துக்கு எதிரான போராட்டச் சூழலில் பேணப்பட்ட இந்த நிதானம் அவருடைய கவிதைகளில் நன்கு தெரிகிறது.

பசுபதி, சென்ற தலைமுறையைச் சேர்ந்த கவிஞர். அவர் தமது நாற்பதாவது வயதிலே, 1965ஆம் ஆண்டு இந்த உலகிலிருந்து விடைபெற்றுச் சென்றுவிட்டார். புற்றுநோய் அவரைப் பலி கொண்டு விட்டது. அந்தக் குறுகிய கால வாழ்க்கையில் சாதியத்தை எதிர்ப்பதற்கும் பொதுவுடைமைச் சமுதாயம் ஒன்றைப் படைப்பதற்கும் எனத் தமது கவிதை வளத்தைமுழுமையாகப் பயன்படுத்திக் கொண்டார் பசுபதி.

சாதிக்கொடுமை, தாழ்வோ சாதி?, மூடமறைக்காதீர் - என்னும் தலைப்புகளிலே பசுபதி படைத்துள்ள கவிதைகளில் அவரது வேதனையின் கொந்தளிப்பும் அவர் நீதி கேட்டு வாதிடும் கர்ச்சனையும் வியக்கும் வகையில் வெளிப்பட்டு நிற்கின்றன. ஒடுக்கப்பட்டோருக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும் அந்த மக்கள் சந்ததி சந்ததியாக அனுபவித்து வருகின்ற இன்னல்களையும் பசுபதி நன்றாக ஆவணப்படுத்தியிருக்கிறார்.

ஒரு தலைமுறைக்கு முன்பு கவிஞர் பசுபதி எதிர்பார்த்த புது உலகம் இப்பொழுதும் எதிர்பார்ப்பாகவே இருக்கின்றது. சாதியம் இன்னும் சாகவில்லை! பொது நலச் சமுதாயம் இன்னும் பிறக்கவில்லை! ஆகவே அவருடைய சிந்தனைகள், ஏக்கங்கள், எதிர்பார்ப்புக்கள் எல்லாம் இன்றைய சந்ததிக்கும் தேவையானவையாகவே உள்ளன. பசுபதியின் புது உலகம் கவிதை நூல் மீண்டும் பிரசுரமாகின்றது. மாளாத ஒரு கவிஞர் மீண்டும் வருகிறார்!




# ஞானம்

## முதல் ஐந்து இதழ்கள்

ஆசிரியர்: தி. ஞானசேகரன்




இலங்கைத் தமிழ் இலக்கியக் களத்திலே பூத்திருக்கும் புதியதோர் சஞ்சிகை 'ஞானம்'. நாடறிந்த நாவலாசிரியராகிய திரு. ஞானசேகரனை ஆசிரியராகக் கொண்ட இச் சஞ்சிகை கண்டி நகரிலிருந்து வெளி வருகின்றது. முப்பத்திரண்டு பக்கங்கள் கொண்ட இந்த இலக்கிய ஏட்டிலே கலை இலக்கியப் படைப்பாளிகளும் வாசகர்களும் எதிர்பார்க்கின்ற அம்சங்கள் பல இருக்கின்றன. நேர்காணல், சிறுகதை, கவிதை, சமகாலக் கலை இலக்கியப் போக்குப் பற்றிய சிந்தனைகள் என்பன ஒவ்வோர் இதழிலும் அடம் பெற்றிருப்பதைக் காண்கின்றோம்.

**நேர்காணல்**

ஞானம் இதழ்களில் உள்ள 'நேர்காணல்' அங்கம் முதலில் நமது கவனத்தை ஈர்த்துக் கொள்கின்றது. நமது படைப்பிலக்கியத் துறை சார்ந்த மூத்த எழுத்தாளர்கள் ஐவரை இந்த நேர்காணல்களில் நாம் தரிசிப்பதற்கு வாய்ப்பு அளித்திருக்கின்றது, ஞானம் அவர்களது இலக்கியத் தளத்தையும் சிந்தனை வளத்தையும் தனித்துவமான இலக்கிய நோக்குகளையும் பலதுறை இலக்கியப் பணிகளையும் இந்த அங்கம் நமக்குக் காட்டுகிறது. பேட்டி தருபவருடைய ஆளுமைகளை இனங்கண்டு, பேட்டி காண்பவர் அவற்றை வெளிக்கொணர்ந்திருக்கும் பாங்கு ரம்மியமாக இருக்கின்றது. இந்த நேர்காணல்களில் ஆழம் இருக்கின்றது. ஒரு முழுமை தெரிகிறது. வாசகனது சிந்தனைக்கு விருந்து இருக்கிறது. பேட்டிகண்ட ஞானசேகரனே ஒரு அனுபவம் உடைய ஒரு படைப்பாளியாக இருப்பது தான் இந்த வெற்றியின் இரகசியம்.

எஸ்.பொ. வுடன் நடத்தப்பட்ட நேர்காணலில் அவரது தனித்துவமான இலக்கியத் தடமும் புலம்பெயர்ந்தோர் இலக்கியம் பற்றிய அவரது எண்ணங்களும் அவரது இலக்கியச் சிந்தனையின் இன்றைய நிலைப்பாடும் முக்கியமாக நோக்கப்பட்டிருக்கின்றன. அவரது எழுத்துக்களில் காணப்படும் பாலியல் விடயங்கள், கிண்டல், நையாண்டிகள், நற்போக்குக் கோட்பாடு என்பனவற்றுக்கு அவர் வாயிலிருந்து வந்த விளக்கங்கள் கவனிக்க வேண்டியவை.

டொமினிக் ஜீவாவுடன் நடத்திய நேர்காணலில் மல்லிகையை மையமாகக் கொண்டு விரிந்த அவரது இலக்கியப் பணி, பரந்த அனுபவம் என்பன நடைமுறை வழிப்பட்ட கருத்துக்களாக வெளிவந்துள்ளன. விமர்சனம், விமர்சகர்கள் பற்றிய அந்தச் சினமும் தாக்குதலும் எங்கு நோக்கி ஏவப்படுகின்றன என்பதை அவர் இன்னும் கொஞ்சம் தெளிவு படுத்தியிருக்கலாம்.

பல்வேறு இலக்கியக் கோட்பாடுகள் பற்றிய அதளிவான, மிகவும் அருமையான ஒரு விளக்கக் கோவையாக அமைந்திருந்

தது கலாநிதி நு.்.மானுடன் நிகழ்ந்த நேர்காணல். நமது கவிதைத்துறை, விமர்சனத்துறை என்பன சார்ந்த சில உறுதியான கருத்துக்களை அவர் இந்த நேர்காணலில் தந்திருக்கிறார்.

செ. யோகநாதனுடன் நடத்தப்பட்ட நேர்காணலில் நமது ஈழத்து எழுத்தாளர் ஒருவரது படைப்பிலக்கியச் சிந்தனைகளும் படைப்பாற்றலும் தமிழகத்து இலக்கியச் சூழலில் எய்திய பரிமாணங்களையும், ஒரு முழுநேரப் படைப்பாளி என்ற வகையில் அவர் பெற்ற அனுபவங்களையும், அவரது படைப்புலக வியாபகத்தையும் காண்கிறோம்.

மூத்த எழுத்தாளராகிய வ.அ. இராசரத்தினத்தின் 52 வருட இலக்கிய முயற்சியின் வளம் முழுவதையும் நம்முன் நிறுத்துகின்றது, அவருடன் நடத்தப்பட்ட நேர்காணல். நமது இலக்கியத்தினது வலு எது, வளம் எது என்பதை அவர் அங்கு அழுத்திக் கூறுகின்றார். வ.அ.இ யினுடைய அனுபவத்தின் காம்பீர்யம் இந்த நேர்காணலில் வெளிப்பட்டு நிற்கிறது.

இந்த நேர்காணலில் தலித்து இலக்கியம், புலம் பெயர்ந்தோர் இலக்கியம், புதுக்கவிதை, இலக்கியத்தில் இணைத்துள்ள இனங்கள் என, சில முக்கிய விடயங்கள் பற்றி, பொதுவாக எல்லாரிடமுமே கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன. இந்தக் கருத்துத் திரட்டு நமது இலக்கியத்தின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு மிகவும் உதவக்கூடியது.

'ஞானம்' தரும் நேர்காணல்கள் நமது இலக்கிய கர்த்தாக்களின் ஆளுமைகளின் பதிவுகள் ஆகையால் இவை நமது சமகால, எதிர்கால எழுத்தாளர்களது படைப்பாற்றலுக்கு இடப்படும் பசளைகள் எனக் கொள்ளலாம்.

**சிறுகதைகள்**

இனி, 'ஞானம்' தந்தள்ள சிறுகதைகள். இவ்வைந்து இதழ்களிலும் 6 சிறுகதைகள் பிரசுரமாகியுள்ளன. இவற்றுள் 'பார்வதி' மலையகத்துப் படைப்பிலக்கிய முன்னோடியாகிய சி. வி. வேலுப்பிள்ளையின் புனைவு. இன்றும் வாழுகின்ற கதை பார்வதி. இதனை 'ஞானம்' மறுபிரசுரம் செய்ததில் பொருத்தப்பாடு இருக்கின்றது.

ஸ்திரீ இலட்சணம் திருமலை வீ.என். சந்திரகாந்தி எழுதிய கதை. பெண்கள் உத்தியோகம் பார்த்தல் என்னும் எண்ணக் கருவின் இரண்டு அந்தங்களையும் இக் கதை ஒப்புநோக்குகிறது. இங்கே காட்டப் படும் முடிபு ஏகமனதான அங்கீகாரத்தைப் பெறக்கூடியதல்ல. எனினும் சித்திரிப்பின் திறத்தினால் கதை கம்பீரமாக நிற்கின்றது. பாத்திரங்களின் குணவியல்புகள் பளிச் சென்று துலங்குகின்றன. அந்தக் குடும்பப் பெண்ணின் ஏக்க அலைகள் படிப்படியாகத் தணிந்து இதமான இளந் தென்றலாக மாறிவிடுவதைக் காட்டும் பாங்கு நயக்கத்தக்கது.

அடைமானம் ரூபராஜ் தேவதாசன் படைத்த கதை. வாழ்க்கைச் செலவு, வரவுக்கு உள்ளே அடங்காமல் திமிறுவதைக் கூறுகிறது. சர்மிளா ஆசிரியையின் திணறல் நமக்கு அவர் மேல் பரிதாப உணர்வை ஏற்படுத்தினாலும் அந்த அனுதாபத்தின் ஒரு பகுதியை அவரது உறுதியற்ற மனப்போக்கு விழுங்கி விடுகிறது. தனது தங்கையினது ஆடம்பரப்போக்கைத் தட்டி அடக்க அவரால் முடியவில்லையே! சர்மிளாவின் மனத் தவிப்பு கதை முழுவதிலும் செறிந்து நிற்கிறது.

'ஆயிரம் காலத்தப் பயிர் அறுவடையின்போது' - ஜமுனா எழுதிய கதை. தனக்கு ஒரு கணவனை நிச்சயம் செய்து கொள்ள வேண்டிய நிலையில் இருக்கும் ஒரு குமரிப் பெண்ணின் மனப்போராட்டத்தின் சித்திரிப்பு இது. மனத்து எண்ணங்கள், அறிவு அனுபவங்கள், சிந்தனை என்பனவற்றின் விசாரணைகள், பயம், பதற்றம், தவிப்பு, உள்ளார்ந்த மகிழ்ச்சி என்னும் உணர்வுகளின் ஆக்கிரமிப்பு, இவற்றினி

டையே நிகழும் இந்தக் கதை நமது மனதைப் பிணித்துக்கொள்கிறது. கலைத்துவம் மிளிரும் படைப்பு. அனுபவம் பெற்ற ஒரு பேனா தரக்கூடிய தர மேம்பாடு இக் கதையில் காணப்படுகிறது.

ராணி சீதரன் எழுதியது 'மீண்டும் நளாயினி'. அவனுக்கு உறுதி குறைந்த மனம். தனது மனைவியின் தோழிமேல் அவனுக்கு ஏற்பட்ட சலனம் அந்த மனத்திலே புகுந்து குழப்படி பண்ணுகிறது. இந்தச் சபலத்தின் வீச்சினால் அவளது மனத்திலும் சலனம். இவற்றுக்கு இடையே அவனது மனைவி நளாயினி இவற்றை அறிந்தும் அறியாதவள்போல நிம்மதியாக இருக்கிறாள். அந்தப் பெண்ணைத் தனது கணவனது பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு விருந்தாளியாக அழைக்கின்றாள்..... இந்தக் கதையின் முடிவிலே ஒரு சவுக்கடி இருக்கிறது! அது முக்கியம்.

அதிர்ச்சி தரும் கதை. கலைத்துவ முதிர்ச்சி புலப்படும் கதை. இதில் உள்ள அர்த்தத்தின் ஆழமும் உணர்வுகளின் பாய்ச்சலும், சித்திரிப்பின் சீர்மையும் நயக்கத் தக்கவை. அவள் நவகால நளாயினி!

'ஞானம்' இதழ்கள் தந்துள்ள இக்கதைகள் இளம் எழுத்தாளர்களது படைப்புகள் என்பது தெரிகிறது. இவை எல்லாமே வித்தியாசமான கதைகள், கதைப் பொருளில் புதுமை, புனைவில் நேர்த்தி என்பன இவற்றில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க அம்சங்கள். 'மீண்டும் நளாயினி' இலக்கியத் தரத்தில் மேம்பட்டு நிற்கிறது.

**நான் பேச நினைப்பதெல்லாம்....**

'நான் பேச நினைப்பதெல்லாம்.. என்னும் தொடர் அம்சம் நமது சமகாலக் கலை இலக்கியப் போக்குகள் பற்றிய சில அவதானிப்புக்களின் வெளிப்பாடாக இருக்கின்றது. நாங்கள் அன்றாட வாழ்வில் காணத் தவறிய - கண்டிருந்தாலும் நமது சிந்தனைக்கு உட்படுத்தத் தவறிய விடயங்கள் இவை. இவற்றை கலாநிதி துரை மனோகரன் எடுத்துச் சொல்லும் போது ''ஆமாம். ஆமாம்'' என்று நமது மனம் ஏற்றுக் கொள்கின்றது.

பத்தி எழுத்துப் பாங்கில் இது அமைந்திருந்த போதிலும் அதன் விடயப்பரப்பு முழுவதிலும் மெல்லிதான விமர்சனம் இழையோடி நிற்கின்றது. நயப்பும் வியப்பும் அறிவுறுத்தலும் கண்டிப்பும் ஆங்காங்கே வந்து விடயத்துக்கு வலு ஊட்டுகின்றன. பல்லினமாகிய விடயங்கள். அவை உளம் கொள்ளும் வகையில் சொல்லப்படுகின்றன. பல்கலைக் கழக ஆசான் ஒருவருடைய கருத்துக்கள் என்பதற்குரிய தனித்துவம் விடயம் ஒவ்வொன்றிலும் துலங்குகிறது.

வண்ணமும் மென்மையும் நறுமணமும் கொண்ட எண்ணப் பூக்கள் இவை! இந்தப்பகுதி 'ஞானம்' சஞ்சிகைக்குச் சிறப்புத் தரும் அம்சம். ஆதலால், கலாநிதியவர்கள் தாம் பேச நினைப்பதை எல்லாம் தொடர்ந்து சொல்லட்டும்.

**கவிதைகள்**

'ஞானம்' இதழ்களில் கவிதைகள் நிறையவே இடம்பெறுகின்றன. இந்த ஐந்து இதழ்களில் 25 கவிதைகள்! இவற்றுள் பெரும்பாலானவற்றின் இலக்கியத்தரம் நன்றாக இருக்கின்றது. இங்கே, படைப்பாளிகள் விண்ணுலகில் சஞ்சரிப்பதைத் தவிர்த்து, மானுடத்தின் உள்ளே உலாவுகிறார்கள். சமகாலப் பிரச்சினைகள், சமுதாயச் சீர்கேடுகள், மானுட விழுமியங்கள், மானுடத்தின் சறுக்கல்கள் முதலியவற்றைப் பற்றிச் சொல்கிறார்கள். இளம் படைப்பாளிகள் தந்த இக்கவிதைகள் மனத்தில் ஒரு நெகிழ்வை, அதிர்வை ஏற்படுத்தத் தவறவில்லை.

இங்கு உள்ள கவிதைகளில் அர்த்தங்கள், கலை, இருப்பு என்பது, பாய்த்தோணி, சதியான சரித்திரம், கருவறையிலிருந்து ஓர் கதறல், கேள்விகளும் இம்சைகளும்,

என்று தணியும், சமாதானம், மாற்ற முடியாத மரபு என்பவை குறிப்பிட்டுச் சொல்லத்தக்க தரச் சிறப்பு உடையவை.

'நியாயம் என்று கிடைக்குமோ?' (க. வெள்ளைச்சாமி), 'ஒருநாள்'(எஸ். சிவஞானசுந்தரம்), 'தோற்றம்'(லலிதா), 'நத்தை போல் ஒடுங்கி வாழும் நாட்கள் இனி மாற வேண்டும்'(லறீனா ஏ. ஹக்), 'விருது நகர் வியாபாரிகள்'(பொன் பூபாலன்), ஆகிய கவிமைகளில் பொருட் செழுமையும் தெளிவும் கலைத்துவமும் மேம்பட்டு நிற்கின்றன. இவை பாராட்டுக்கு உரிய கவிதைகள்,



இவை தவிர, தம்மைப் படைத்தவனது எண்ணத்தை வாசகனுக்கு உணர்த்த மறுக்கின்ற ஒரு சில கவிதைகளும் இங்கு இல்லாமல் இல்லை.

**சஞ்சிகையின் இலட்சியம்**

இக்கட்டுரையில் இதுவரை எடுத்து நோக்கப்பட்ட அம்சங்கள் தவிர, நூல் மதிப்பரை, கலை இலக்கியம் சார்ந்த கட்டுரைகள் என்பனவும் 'ஞானம்' முதல் ஐந்து இதழ்களிலும் காணப்படுகின்றன. 'ஞானம்'விரிகின்ற தளம் இது.

விடயத் தொகுப்பு முதல் சஞ்சிகையின் அட்டையின் நிறத்தேர்வு ஈறாக, சஞ்சிகையின் உருவாக்கத்தின் ஒவ்வோர் அம்சத்திலும் ஆசிரியர் ஞானசேகரன் கூடிய கவனம் செலுத்தியிருப்பது புலனாகிறது. நேர்த்தியான பதிப்பு.

"இலக்கியப் பாரம்பரியங்கள், இலக்கிய உலகில் ஏற்படும் மாற்றங்கள், வளர்ச்சிப் போக்குகள், கருத்தோட்டங்கள் ஆகியவற்றின் காலக் கண்ணாடியாக 'ஞானம்' மிளிரும் தரமான எழுத்தாளர்கள் இச் சஞ்சிகை மூலம் இனங்காட்டப்படுவார்கள்" என்பன ஆசிரியருடைய எதிர்பார்ப்புகள். இவை 'ஞானம்' சஞ்சிகையில் நிறைவேறும் என்னும் நம்பிக்கையை இந்த ஐந்து இதழ்களும் மெய்ப்பித்து நிற்கின்றன.

81/4, பாலெகாடை வீதி, நுகேகொட.
தொ. பே. : 812407, 075-515982